Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 498 பிலவ வருடம், பங்குனி மாதம் 28ஆம் திகதி திங்கட்கிழமை (11.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 09 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30




## சீரற்ற காலநிலையால் மக்கள் பெரிதும் பாதிப்பு: 3 பேர் உயிரிழப்பு

படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

02 பக்கம்



## ஜனாதிபதிக்கு ஆதரவாகவும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள்

02 பக்கம்

# இடைக்கால அரசுக்கு அவசர ஆராய்வு!

## ஜனாதிபதி கோட்டா மந்திராலோசனை:

## நேற்றிரவு 41 எம்.பிக்களுடன் முக்கிய பேச்சு

**யோ.தர்மராஜ்**

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வுகாணும் நோக்கில் இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார். அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் 41 உறுப்பினர்களுடன் இது குறித்து நேற்றிரவு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக சுயாதீனக் குழுவினர்...

02 பக்கம்

## மைத்ரி, வீரவங்ச தரப்பினர் சஜித்துடன் சந்திப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் முக்கியமான கூட்டமொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது...

02 பக்கம்

## திறமையற்ற கோட்டாபய அரசு இலங்கையை பொருளாதார, அரசியல் நெருக்கடியில் தள்ளியது

### இந்திய ஊடகத்திடம் சொன்னார் ரணில்



திறமையற்ற கோட்டாபய அரசாங்கம் இலங்கையை பொருளாதார அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதென குற்றஞ்சாட்டியுள்ள முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அரசாங்கத்தின் முழுமையான தோல்வியே மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்கவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## எரிபொருளுக்காக காத்திருந்த பாரவூர்தியில் சிக்கி முதியவர் உயிரிழப்பு



02 பக்கம்



## உஷ்

இவ்வாரம் அமெரிக்கா செல்லவிருந்த பெசில், அந்த பயணத்தை ஒத்திவைத்துள்ளாராம்.

நெருக்கடியான நிலையில் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் இருந்து தப்பிக்கவே அவர் இவ்வாறு தனது பயணத்தை ஒத்திவைத்ததாக தகவல்.

இதேவேளை, ஆளுங்கட்சிக்குள் தன்னுடன் நெருக்கமாக இருந்த அமைச்சர்கள் பலர் தனக்கெதிராக சதிவேலைகளை செய்வதாக நெருக்கமான பலரிடம் மனந்திறந்து கவலை வெளியிட்டாராம் பெசில் .

## எரிபொருள் வரிசையில் நின்ற மேலும் இருவர் உயிரிழப்பு

**நா. தினுஷா**

எரிபொருள் வரிசையில் நின்ற மேலும் இருவர் தங்கொட்டுவ மற்றும் வென்னப்புவ பகுதிகளில் உயிரிழந்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பிய நிலையில் புறப்பட்டுச் செல்ல தயாராகிய கார் ஒன்றின் சாரதி காருக்குள்ளேயே உயிரிழந்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் வென்னப்புவ - தம்பரவில பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அருகில் இந்த மரணம் சம்பவித்துள்ளது...

02 பக்கம்



படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்

## காலிமுகத்திடலில் தொடரும் "கோ ஹோம் கோட்டா"

### இரண்டாவது நாளாக நேற்றும் போராட்டம்

**யோ.தர்மராஜ்**

''கோ ஹோம் கோட்டா'' எனக் கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் நாளுக்கு நாள் வலுபெற்றுவரும் நிலையில்,...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



கொரோனா காலத்தில மக்கள் வீட்டுக்குள்ள இருக்கோணுமெண்டு சனாதிபதி ஐயா உத்தரவு போட்டார்.. கொரோனா முடியேக்க சனாதிபதி ஐயா வீட்டுக்குள்ள இருக்கோணுமெண்டு மக்கள் ஓடர் போடுகின... வாழ்க்கை ஒரு வட்டம் பாருங்கோ...

## பாகிஸ்தானில் கவிழ்ந்தது இம்ரான் கான் அரசு!



11 பக்கம்




## காலிமுகத்திடலில் தொடரும்...

காலிமுகத்திடலில் நேற்றுமுன்தினம் (09) முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் கொட்டும் மழையில் இரண்டாவது நாளாகவும் நேற்று (10) வரை தொடர்ந்தது.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தால் நாடு பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துவருவதால் ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரசாங்கமும் உடனடியாக பதவி விலக வேண்டுமென கடந்த மாதம் முதல் நாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ள கொழும்பு காலிமுகத்திடலில் நேற்றுமுன்தினம் (09) காலை பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் உடனடியாக பதவி விலகுமாறுகோரி, ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் முன்னெடுக்கப்படும் இந்த மக்கள் போராட்டம் நேற்று (10) இரண்டாவது நாளாகவும் தொடர்கிறது. கடும் மழையையும் பொருட்படுத்தாமல் நேற்றுமுன்தினம் (09) நள்ளிரவு முதல் போராட்டக்காரர்கள் அவ்விடத்திலேயே தங்கி தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

காலிமுகத்திடலுக்கு அருகாமையில் நேற்றுக் காலை ஆரம்பமான பொதுப் போராட்டத்திற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் மக்களும் குவிந்திருந்தனர்.

இவர்கள் இரவு முதல் அவ்விடத்திலேயே தங்கி "கோ ஹோம் கோட்டா" என முழக்கமிட்டதுடன், நாட்டை மீட்பதற்கு சிறந்த தலைமைத்துவம் வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இப் போராட்டத்தில் சிறுவர்களும் வயதான முதியவர்களும் கலந்துகொண்டதுடன், அங்கவீனமுற்றவர்களும் கலந்துகொண்டு தங்களுடைய எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதேவேளை, இப்போராட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம் சமூகத்தினர் நேற்றுமுன்தினம் (09) பிற்பகல் வீதியில் தமது சமய வழிபாடுகளை மேற்கொண்டதுடன், நோன்பு திறப்பதற்கும் சகோதர சமூகத்தினர் பெரும் உதவிகளை செய்தமை நாட்டின் ஒற்றுமையை பலப்படுத்தியுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அங்கேயே இருந்த மக்கள் கூட்டம் நேற்றுக் காலை வரை இரவு முழுவதும் விழித்திருந்ததுடன், வீதியில் குவிந்திருந்த குப்பைகளை போராட்டக்காரர்கள் தாமாக முன்வந்து அகற்றியமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு சமூக ஆர்வலர்களும் உதவிக்கரம் நீட்டிவருவதுடன், உணவு, நீர் போன்றவற்றையும் வழங்கிவருவதால் போராட்டக்காரர்கள் மழையையும் பொருட்படுத்தாமல் அவ்விடத்திலேயே இரண்டாவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.









## திறமையற்ற கோட்டாபய...

தனது அரசாங்கத்தின் காலத்தில் பொருளாதார நெருக்கடி ஒருபோதும் ஏற்படவில்லை எனவும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் வரிசைகளில் நிற்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் வீதியில் இறங்குவதற்கு ஏதாவது காரணமிருக்க வேண்டும், நாட்டின் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் திறமையின்மை காரணமாகவே இவை அனைத்தும் இடம்பெறுகின்றன என ரணில் விக்ரமசிங்க ஏ.என்.ஐக்கு தெரிவித்துள்ளார். ரணில் மேலும் கூறியதாவது,

நான் பிரதமராகயிருந்தவேளை நாட்டின் பொருளாதாரம் திறமையான நிலையிலிருந்தது. இந்த அரசாங்கத்தின் திறமையின்மை மக்களை வீதிக்கு கொண்டுவந்துள்ளது.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் கூட பயனளிக்கக்கூடிய நிவாரணம் கிடைப்பதற்கு நீண்டகாலம் ஆகும்.

இந்தியா இலங்கைக்கு தன்னால் முடிந்தளவிற்கு உதவி வழங்கியுள்ளது.

இந்தியா நிதி தொடர்பற்ற விதத்தில் உதவிகளை வழங்கும் அதேவேளை, இந்தியாவின் ஆதரவின் விளைவுகள் எவ்வாறு உள்ளன என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இந்த அரசாங்கத்தின் கீழ் நாட்டிற்கு சீனாவிடமிருந்து முதலீடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளது தற்போது இடம்பெறுவது நாட்டிற்கு பேரழிவு.

இரண்டு வருடங்களாக நாடு பொருளாதார விடயங்களை அலட்சியம் செய்தது. எங்கள் ஆட்சி முடிவிற்கு வந்தவேளை, கடன்களை செலுத்துவதற்கு பணமிருந்தது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்றது நாட்டில் அரசாங்கம் இல்லை. கடந்த இரண்டு வாரங்களில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட தீர்மானித்துள்ளது. ஆனால் இது நீண்டகாலம் நீடிக்கலாம்.

அதற்கு முன்னர் நாங்கள் வளங்கள் அற்ற நிலைக்கு தள்ளப்படுவோம்.

அரசாங்கத்தின் கையிருப்பில் போதியளவு நிதியிருப்பதாக தெரியவில்லை, தற்போது அரசாங்கம் கட்டணங்களை செலுத்துவதற்காக முன்னணி ஏற்றுமதி நிறுவனத்திடமிருந்து பணத்தை பெறுகின்றது.

மே மாதத்தின் இரண்டாவது வாரத்தில் எரிபொருள் கொள்வனவிற்கான இந்தியாவின் கடன் முடிவிற்குவரும். அதன் பின்னர் நாங்கள் மிகவும் நெருக்கடியான நிலையை எதிர்கொள்ளப்போகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மைத்திரி, வீரவங்ச...

ஆளுங்கட்சியின் கூட்டணியில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படப்போவதாக அறிவித்த மைத்திரிபால சிறிசேன தரப்பினர், விமல் வீரவங்ச தரப்பினர், அனுர பிரியதர்ஷன யாப்பா தரப்பினரே நேற்று எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது இடைக்கால அரச நிர்வாகம் தொடர்பான பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதே தரப்பினர் ஏற்கனவே நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சீரற்ற காலநிலையால்...

*யோ.தர்மராஜ்*

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் நாட்டின் பல பகுதிகள் நேற்று (10) நீரில் மூழ்கியதுடன், மலையகப் பகுதிகளில் மண்சரிவு அபாயமும் ஏற்பட்டிருந்தது.

நாட்டில் நேற்று காலை நிலவிய சீரற்ற காலநிலையால் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்கள் நீரில் மூழ்கியதுடன் மக்களின் அன்றாட செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தன. இதேவேளை, மலையகப் பகுதிகளில் மண்சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, மேல், கிழக்கு, ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் 100 மில்லிமீற்றர் மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் 75 மில்லி மீற்றர் மழை பெய்யக் கூடும் எனவும் எதிர்வு கூறியுள்ளது.

அதேபோன்று, தென்மாகாணத்தில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 40 -45 கிலோமீற்றருக்கு வீசக்கூடும் எனவும் சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மழையும் பெய்யக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலையால் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, மட்டக்களப்பு, பதுளை, யாழ்ப்பாணம், மாத்தளை, அம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் 128 குடும்பங்களைச் சேர்ந்த 471 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையில் சிக்கி கொழும்பில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர். இரத்தினபுரியில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேலும் பதுளை, கொழும்பு, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கும் மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் வரிசையில்...

கொச்சிக்கடை - போருதொட்ட பகுதியில் வசித்து வந்த மொஹமட் ஜெஸ்மின் என்ற நபரே இவ்வாறு மரணித்துள்ளார்.

காருக்கு எரிபொருளை நிரப்ப அவர் எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு வந்துள்ளதுடன் எரிபொருளை நிரப்பிய பின்னர் சில அடி தூரம் கார் சென்றுள்ளதுடன் திடீரென நின்றுள்ளது.

அப்போது அருகில் இருந்தவர்கள் சென்று பார்த்தபோது, எரிபொருளை நிரப்பிய காரில் சாரதி ஆசனத்தில் இருந்த நிலையிலேயே இறந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் ஊழியர்கள் சம்பவம் பற்றி வென்னப்புவ பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தங்கொட்டுவ - நீர்கொழும்பு பிரதான வீதியின் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இரண்டு நாட்களாக காத்திருந்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் செல்லும் பஸ் ஒன்றின் சாரதி நேற்றுமுன்தினம் திடீரென உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இடைக்கால அரசுக்கு...

முன்வைத்த யோசனைக்கு அமையவே இந்த முக்கிய பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டார முக்கியஸ்தர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளதால் தற்போதைய நெருக்கடியை சமாளிப்பதற்கு உடனடியாக இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை முன்வைத்து வருகின்றனர்.

எனினும், எதிர்க்கட்சிகள் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ள நிலையில், அரசாங்கத்திலிருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படத் தீர்மானித்துள்ள குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆராய்ந்து வருகின்றார்.

குறிப்பாக, புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ள அநுர பிரியதர்ஷன யாப்பா எம்.பி. தலைமையிலான குழு ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை கவனத்திற்கொண்டுள்ள ஜனாதிபதி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக நேற்றிரவு 7 மணிக்கு சுயாதீனக் குழுவுடன் முக்கிய பேச்சுவார்த்தையை முன்னெடுத்தார்.

இதன்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை புதிய பிரதமராக நியமிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்ட போதிலும், அவர் அந்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால் அக்கட்சியின் பிரதித் தலைவரும் சிரேஷ்ட உறுப்பினருமான நிமல் சிறிபால டி சில்வாவை புதிய பிரதமராக நியமிப்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்கவையும் பிரதமராக நியமிக்கலாம் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து ஜனாதிபதி தீவிரமாக ஆராய்ந்துவருவதாகவும் அறிய முடிந்தது.

இதேவேளை, புதிய பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டால் குறைந்த அமைச்சர்களை கொண்ட அமைச்சரவை ஒன்றையும் நியமிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. அதன்படி, ஏற்கனவே, நியமிக்கப்பட்டுள்ள நிதி, கல்வி, வெளிவிவகார மற்றும் பெருந்தெருக்கள் ஆகிய நான்கு அமைச்சர்களுடன் 10 -15 வரையான அல்லது அதற்கு குறைவான அமைச்சர்களை கொண்ட அமைச்சரவை ஒன்றை நியமிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவையில் சிரேஷ்ட மற்றும் அனுபவமுள்ளவர்களை நியமிப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளதால் முன்னாள் அமைச்சர்கள் பலருக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்க வாய்ப்பில்லை என்றும் அறிய முடிந்தன. இடைக்கால அரசாங்கம் அமையுமிடத்து புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவையும் ஓரிரு நாட்களில் பதவி ஏற்றுக்கொள்ளும் எனவும் அறிய முடிந்தது.

## எரிபொருளுக்காக...

*(யாழ். நிருபர்)*

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் எரிபொருளுக்காக காத்திருந்த பாரவூர்தியுடன் விபத்துக்குள்ளாகி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கனகரட்ணம் (வயது-72) என்ற முதியவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அச்சுவேலி - தெல்லிப்பழை வீதியில் இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் நிரப்புவதற்காகச் சென்ற பாரவூர்தி வரிசையில் நின்று செல்லும் போது, முன்னால் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவரை மோதித்தள்ளியது. அதன் போது, முதியவர் பாரவூர்தியின் சக்கரத்திற்குள் சிக்கி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாரவூர்தி சாரதியை கைது செய்துள்ள அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், பாரவூர்தியையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ளனர். அதேவேளை, கடந்த வாரம் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவான் பகுதியில் எரிபொருள் நிரப்புவதற்காக வரிசையில் நின்ற தனியார் பஸ் ஒன்றில் பயணித்த பயணி ஒருவர் பஸ்ஸின் கீழ் இறங்கி இருந்தவேளை, பஸ்ஸினை சாரதி வரிசையில் முன் நகர்த்தியபோது, அதன் சக்கரத்தினுள் சிக்கி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு ஆதரவாகவும்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்திற்கு ஆதரவாக நாட்டில் சில இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நேற்று நடைபெற்றன. கண்டி, நிக்கவரெட்டிய, தங்காலை, படல்கும்புர போன்ற பிரதேசங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதில் ஆளுங்கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேச சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள் உட்பட அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் நடைபெற்றது.

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

# அரசாங்கத்துக்கு பதிலாக ஆட்சி கட்டமைப்பை மாற்றக் கோரினால் நாமும் போராடத் தயார்

## இனவாத செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டுமென யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

சிங்கள மக்கள் ஆட்சியை மாற்றக் கோராமல் ஆட்சி கட்டமைப்பை மாற்றக் கோரினால் தெருத்தெருவாக இறங்கிப் போராட நாம் தயார் என யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபையில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சமகால நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே மாநகர முதல்வர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் கோரிக்கைகளுக்கு பதில் கிடைக்க வேண்டும். உலகம் முழுவதும் உள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெரும்பாலும் சமஷ்டியே இருக்கின்றது. இதனை சிங்கள ஆட்சியாளர்களும் சிங்கள மக்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஐரோப்பாவில் உள்ள நாடாக இருக்கட்டும். வட அமெரிக்க நாடுகளாக இருக்கட்டும். அனைத்து நாடுகளும் தங்களுடைய ஆட்சி கட்டமைப்பாக சமஷ்டியையே கொண்டுள்ளது. அதனால்தான் அவர்கள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றனர். அதனை தென்னிலங்கை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து இங்கு காசு வந்தால் உடனடியாக பயங்கரவாத தடுப்பு பிரிவு போய் விசாரிக்கிறது. இவ்வாறு இருந்தால் எவ்வாறு வெளிநாட்டிலிருந்து பணம் இங்கு வரும். எல்லாவற்றையும் இனவாத கண்ணோட்டத்துடன் பார்க்க முடியாது.

ஏராளமான புலம்பெயர்ந்த மக்களையும் அமைப்புகளையும் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளன. அப்படி இருந்தால் எவ்வாறு அவர்கள் இங்கு முதலிடுவார்கள்.

ஆட்சி கட்டமைப்பும் அரசியல் யாப்பும் மாற்றப்பட வேண்டும். இனவாத செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். சிங்கள சகோதரர்கள் தங்கள் ஆட்சியாளர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து இனப்பிரச்சினையை தீர்க்க ஒத்துழைக்க வேண்டும்.

நான் பெரிது நீ பெரிது என்று தமிழ் அரசியல்வாதிகள் போராடுவதை விடுத்து எல்லோரும் சர்வதேச சமூகத்திடம் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்களிடம் "இலங்கைக்கு நிதி உதவி செய்யப் போவதாக இருந்தால் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையை வழங்கி விட்டு செய்யுங்கள்" என்ற கோரிக்கையை வையுங்கள்.

சிங்கள மக்கள் ஆட்சியை மாற்றக்கோரி போராடி வருகிறார்கள். ஆனால், தமிழர் பகுதிகளில் இந்தப் போராட்டங்கள் பெரிய அளவில் இடம்பெறவில்லை. ஆனால் சிங்கள மக்கள் ஆட்சியை மாற்றக் கோராமல் ஆட்சி கட்டமைப்பை மாற்றக் கோரினால் தெருத்தெருவாக இறங்கிப் போராட நாம் தயார் என்றார்.

# அம்பாறை ஆலையடிவேம்பில் வீடொன்றை உடைத்து

## 3 தாலிக்கொடிகளுடன் 54 பவுண் தங்க நகைக் கொள்ளை



(கனகராசா சரவணன்)

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேசத்தில் வீடொன்றின் கதவை உடைத்து 3 தாலிக்கொடிகள் உட்பட 54 பவுண் தங்க ஆபரணங்களை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (10) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலையடிவேம்பு பிரதான வீதி டயக்கோணியா முன்பள்ளி பாடசாலைக்கு அருகாமையிலுள்ள குறித்த வீட்டின் உரிமையாளரின் பேரக் குழந்தையின் பிறந்தநாள் நிகழ்வு நேற்று (10) இடம்பெறவிருந்த நிலையில் உறவினர்கள் சென்று தங்கியிருந்து பிறந்தநாள் கொண்டாடுவதற்காக வீட்டை அலங்காரம் செய்துவிட்டு, பிறந்தநாள் கேக் செய்யும் நடவடிக்கையில் நேற்று முன்தினம் இரவு ஈடுபட்டதுடன், நள்ளிரவு 1 மணிக்கு உறவினர்கள் தமது தாலிக்கொடி மற்றும் தங்க ஆபரணங்களை களற்றி அறையின் அலுமாரியில் வைத்து பூட்டிவிட்டு அருகிலுள்ள அறையில் எல்லோரும் நித்திரைக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் நள்ளிரவு ஒரு மணிக்கு பின்னர் பூட்டியிருந்த குறித்த வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள், அங்கு நித்திரையில் இருந்தவர்களது அறையின் கதவை பூட்டிவிட்டு அங்கிருந்து அடுத்த அறையின் அலுமாரியில் இருந்த 3 தாலிக்கொடிகள் உட்பட 54 பவுண் தங்க ஆபரணங்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அதிகாலை 6 மணிக்கு நித்திரையில் இருந்து எழும்பியபோது தங்க ஆபரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டமை தெரியவந்ததையடுத்து, பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர். இதனையடுத்து அம்பாறையில் இருந்து தடயவியல் பிரிவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று மற்றும் கோளாவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழின் சில பகுதிகளில் கடும் மழை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளில் இன்றும் கனமழை பெய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வங்காள விரிகுடாவில் தோற்றம் பெற்ற வளிமண்டல மேலடுக்கு சுழற்சி முல்லைத்தீவுக்கு கிழக்கே 300 கிலோ மீற்றர் தொலைவில் வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ளது.

இதன் காரணமாக அடுத்துவரும் 36 மணி நேரத்திற்குள் வடமாகாணத்தில் இடி மின்னலுடன் கூடிய மழையாக இருக்கும் என்பதனால் மக்கள் அவதானமாக இருப்பது அவசியமாகும் என அறிவித்துள்ளார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஏப்ரல் 11ஆம் திகதி, திங்கட்கிழமை

# மக்களுக்கு தேவை பதில்கள்!

நாட்டின் பொருளாதார நெருக்கடியும் அரசியல் நெருக்கடியும் ஒரே நேரத்தில் வந்திருப்பதால் அரசாங்கம் தட்டுத்தடுமாறிக்கொண்டிருக்கிறது.

அரசாங்கத்திற்கு எதிராக என்றுமில்லாவகையில் போராட்டங்கள் வலுத்துக்கொண்டிருக்கின்றன. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் என்றுமில்லாதவகையில் அரச தலைவர்களுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் கோட்டை காலிமுகத்திடலுக்கு முன்பாக ஆரம்பமான போராட்டம் நேற்றுமாலை வரை தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இந்தப் போராட்டத்தில் இளைஞர் யுவதிகள் மட்டும், அதுவும் எந்த அரசியல் கட்சியினதும் ஏற்பாடின்றி கலந்துகொண்டமை கவனிக்கத்தக்கது. அதற்கும் அப்பால், கருத்தடை மாத்திரைகளை உணவில் சேர்க்கிறார்களென பேரினவாத அரசியல்வாதிகளால் குற்றஞ்சாட்டப்பட்ட முஸ்லிம்கள் நோன்பைத் துறக்க சிங்கள இளைஞர்களே போராட்டக்களத்தில் உதவிய காட்சி பேரழகு.

இன, மத வேறுபாடின்றி இன்று நாட்டு மக்கள் வீதியில் இறங்கியிருப்பதற்கான காரணம், பொருளாதார சுமை எந்தப் பேதமுமின்றி மக்களை தாக்கியிருப்பதுதான். கடல் வளமும், இயற்கை வளமும் மிகுந்த இலங்கை, ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகளால் தற்போது கடும் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது.

தினசரி மின்வெட்டு தொடர்கதையாகி விட்டது. அந்நிய செலாவணி இருப்புக் குறைவால் எரிபொருள் இறக்குமதி குறைந்து, பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு பற்றாக்குறையுடன், அவற்றின் விலை பல மடங்கு உயர்ந்திருக்கிறது. உணவுப் பொருட்களின் விலை உயர்வாலும் தட்டுப்பாட்டாலும், பெரும்பாலான குடும்பங்கள் இருவேளை உணவு முறைக்கு மாறும் அளவிற்கு நாட்டு மக்கள் அல்லாடுகின்றனர்.

அதுமட்டுமல்ல, உலக நாடுகளிடம் வாங்கிய பல பில்லியன் டொலர் கடன் சுமையால் நாடு தள்ளாடுகிறது. கடனைத் திருப்பித் தர முடியாமலும், அன்றாடச் செலவுகளுக்கு மீண்டும் அந்நியக் கடனை வாங்க வேண்டிய நிலையிலும் தத்தளிக்கும் நிலைமை.

இலங்கை வெளிநாடுகளில் வாங்கியுள்ள கடனின் அளவு 51 பில்லியன் டொலர் (இலங்கை ரூபா மதிப்பில் 14.3 இலட்சம் கோடி). இதில் உடனடியாக திருப்பிக் கொடுத்தாக வேண்டிய கடனின் மதிப்பு 7 பில்லியன் டொலர். ஆனால், அந்நிய செலாவணி கையிருப்பு 2 பில்லியன் டொலர் மட்டுமே இருக்கிறது. அதுவும் அன்றாட இறக்குமதிக்கு அளிக்கவே போதவில்லை.

இந்தநிலை திடீரென ஏற்பட்டு விடவில்லை. கடந்த 2019ஆம் ஆண்டிலிருந்தே ஆட்சியாளர்களின் தவறான கொள்கை முடிவுகளால் நாடு பொருளாதார சரிவை நோக்கிச் செல்லத் தொடங்கி விட்டது. கடந்த இரண்டாண்டு கால கொரோனா பொதுமுடக்கம் இந்த வீழ்ச்சியை மேலும் விரைவுபடுத்திவிட்டது.

2019இல் ஜனாதிபதி கோட்டாபய மேற்கொண்ட சில முக்கிய முடிவுகளே இன்றைய நிலைக்குக் காரணம் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். முதலாவதாக, நாட்டின் வரிவிதிப்பு முறையில் மாற்றம் செய்த ஜனாதிபதி, 15% வரியை 8% ஆகக் குறைத்தார். இதனால் அரசின் வரி வருவாய் குறையத் தொடங்கியது. அதேசமயம், அரசுத்துறையில் ஒரு இலட்சம் புதிய வேலைகளை அவர் உருவாக்கினார். அதனால் அரசின் செலவினம் அதிகரித்தது.

இரசாயன உரத்தை தடை செய்து போதிய ஆய்வின்றி இயற்கை விவசாயத்தை அரசு நடைமுறைப்படுத்தியதால், இலங்கைக்கே உரித்தான தேயிலை, மிளகு, ஏலம், காய்கறி உற்பத்தியில் சுமார் 30% சரிவு ஏற்பட்டது. அதேசமயம், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% பங்களிக்கும் சுற்றுலாத் துறையும் கொரோனா நோய்த்தொற்றால் கடும் வீழ்ச்சியடைந்தது. 2019இல் 7.5 பில்லியன் டொலராக இருந்த சுற்றுலா வருவாய், 2021இல் 2.8 பில்லியன் டொலராகக் குறைந்தது. இந்த நிலையிலும், கடந்த நிதியாண்டில் இராணுவத்துக்கு 1.62 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கொரோனா தொற்றுப் பரவலால் விவசாய விளைபொருள், ஆயத்த ஆடை ஏற்றுமதியும் சரிவு கண்ட நிலையில், நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை 2021இல் 6 பில்லியன் டொலராக அதிகரித்தது. அதேபோல, நாட்டின் நிதிப் பற்றாக்குறை 2020இல் 5% ஆக இருந்தது, 2022இல் 15% ஆக அதிகரித்தது. இந்த பொருளாதாரச் சரிவால், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு 300 ரூபாவை தாண்டியுள்ளது. இது நாட்டின் பொருளாதார நிலையை மேலும் பாதித்தது.

2021 நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 1.5% பின்னடைவை சந்தித்தது. பல முதலீடுகளுக்கு சீனாவின் கடனுதவியை இலங்கை சார்ந்திருந்தது. அந்நாட்டுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய கடனை செலுத்த முடியாததால், பல அரசு சொத்துகளை சீனாவுக்கு குத்தகைக்கு விடும் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடனில் சீனா 10% பங்கு வகிக்கிறது.

இவை அனைத்துக்கும் மேலாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கருத்தில் கொள்ளாமல், அதிக அளவிலான நாணயத்தாள்களை அச்சிட்டது இலங்கை அரசு. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 3 இலட்சம் கோடி இலங்கை ரூபா அச்சிடப்பட்டுள்ளது. நாட்டின் உற்பத்தி - வருவாயைக் கணக்கில் கொள்ளாமல் செயற்கையாக நாணயத்தாள்களை பெருக்கியதன் விளைவாக, நாட்டில் பணவீக்கம் அதிகரித்தது. இதுவே உச்சபட்ச விலைவாசி உயர்வுக்கு வழிவகுத்திருக்கிறது.

கடந்த ஒரு மாதமாக நடைபெறும் உக்ரைன் - ரஷ்யப் போரால், கோதுமை, சமையல் எண்ணெய்க்கு அந்நாடுகளைப் பெருமளவில் சார்ந்திருக்கும் இலங்கை கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை இறக்குமதியைச் சார்ந்திருக்கக் கூடாது என்ற அடிப்படை உண்மையை இலங்கை இப்போது உணர்ந்திருக்கிறது. வெளிநாட்டுக் கடன்களையே இலங்கை நம்பியிருப்பது நாட்டின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது.

சித்திரை புதுவருடத்திற்கு வீடுகளில் மகிழ்ச்சியாக இருக்கும் பெரும்பான்மை சிங்கள மக்கள் இன்று வீதியில் இறங்கி நிற்கவேண்டிய நிலைமை. அவர்களுக்கு கொஞ்சமாவது அரசியல்வாதிகளின் உண்மைமுகம் புரிய ஆரம்பித்திருக்கிறது. காலாகாலம் அடக்குமுறையால் சிக்குண்டு கிடக்கும் தமிழ், முஸ்லிம் மக்களும் அவர்களுடன் கைகோர்த்துள்ளனர். அரசியலால், பிரிவினைவாதத்தால் சிதறுண்டு போன மக்கள் ஒன்றுசேர்ந்து புதிய மாற்றமொன்றைக்கோரி நிற்கின்றனர். மோசமான அரசக் கொள்கைகளினால் ஏற்பட்ட விளைவுகளை மக்கள் ஏன் அனுபவிக்க வேண்டும், அப்படியானால் அரச அதிகாரிகள் எதற்கு, அரசியல்வாதிகள் எதற்கு, அரசாங்கம் எதற்கு? பதில்கள் தேவை.



# நரம்பு சுருட்டல் நோயை குணப்படுத்த முடியும்!

## அதுபற்றிய மூடநம்பிக்கையை...?

நரம்பு சுருட்டல் நோய் பற்றி பல மூட நம்பிக்கைகள் சமுதாயத்தில் உலாவி வருவதால், நோய் பாதித்தவர்கள் சிகிச்சை பெற முன்வருவதும், அதிலிருந்து குணமடைவதும் பாதிக்கப்படுகிறது.

தமிழகத்தின் கோவையிலிருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை, நரம்பு சுரட்டல் நோய் குறித்தும், அதன் சிகிச்சை முறைகள் குறித்தும் விரிவான விளக்கத்தை வெளியிட்டுள்ளது.

உடலில் நரம்பு மண்டலம், மிக அரிதானப் பணியை செய்கிறது. அதுவும் கால் பகுதியிலிருக்கும் நரம்புப் பகுதி. காலிலிருந்து இரத்தத்தை இதயத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். புவியீர்ப்பு சக்திக்கு எதிராக இப்பணியை அது மேற்கொள்கிறது. இந்த நரம்புகளில், இரத்த ஓட்டத்தை ஒரு வழிப் பாதையாக மாற்றும் வால்வுகள் அமைந்துள்ளன. இவை, இரத்த நரம்புகளில் கீழ்நோக்கி வடிவதைத் தடுக்கின்றன. ஒருவேளை, இந்த வால்வுகள் பலவீனமடைந்துவிட்டால் தனது வேலையை சரிவர செய்ய முடியாமல், இரத்தம் நரம்புகளின் வழியாக பயணிக்கும் போது கீழ்நோக்கி பாயும் அபாயத்தை ஏற்படுத்தும். அது நரம்புகளில் சில இடங்களில் தங்கிவிடும். இவ்வாறு நாள்பட்டு இரத்தம் நரம்புகளில் தங்கும்போது, அது தோலுக்கு மேலே, நரம்புகள் புடைத்தபடி சுருள் சுருளாக சுற்றியவாறு பச்சை அல்லது கறுப்பு நிறத்தில் இரத்தம் நின்றிருக்கும் வகையில் தெரிய ஆரம்பிக்கும்.

இதுவே நரம்பு சுருட்டல் நோயாகும். இந்த நோய்க்கு பல அறிகுறிகள் உள்ளன. இது நபருக்கு நபர் மாறுபடும். ஆனால் பெரும்பாலானோருக்கு இந்த அறிகுறிகள் தென்படும்.

1. கால் நரம்புகளில் பச்சை அல்லது கரும்பச்சை நிறத்தில் நரம்புகள் தெரிவது.
2. சுருள் சுருளாக காலின் கீழ் பகுதியில் நரம்புகள் தெரிவது.
3. நீண்ட நேரம் நின்று கொண்டிருக்கும் போது அதிக கால்வலி.
4. கால்களில் அரிப்பு கால்களில் அரிப்புடன் புண்கள் தோன்றுவது.
5. சில நேரங்களில் அரிப்புடன் கால்களின் நிறம் மாறுவது.

ஆனால், இந்த நரம்பு சுருட்டல் நோய் குறித்து பல மூட நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. அதுவே நோயாளிகள் சிகிச்சைக்கு வராமல் தடுத்துவிடுகிறது.

நரம்பு சுருட்டல் நோய் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாவிட்டாலும் வாழ்முறையை மிக மோசமாக பாதித்துவிடுகிறது.

இந்த நோய்க்கான சிகிச்சை முறை, சரியான நோயறிதலில் தொடங்கி, எந்த விதமான சிகிச்சை அளிப்பது என்பதில் இணைந்து, அறுவை சிகிச்சை, லேசர், ரேடியோ கதிர்வீச்சு, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட வெனாசீல் போன்ற சிகிச்சைகளில் சரியானவொன்றை தேர்ந்தெடுத்து சிகிச்சையளித்து குணப்படுத்த முடியும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

நரம்பு சுருட்டல் நோய், சிகிச்சை பெற்று குணமடைந்தாலும், மீண்டும் வரும் என்பது ஒரு மூடநம்பிக்கை.

முறையாக நோயை கண்டறிந்து உரிய சிகிச்சை அளித்து, சிகிச்சைக்குப் பிறகு சரியான பயிற்சிகளை மேற்கொண்டால் பெரும்பாலானோருக்கு மீண்டும் நரம்பு சுருட்டல் ஏற்படாது. மருத்துவர்கள் கொடுக்கும் அறிவுறுத்தல்களை நோயாளிகள் சரியாக பின்பற்ற வேண்டும். சிகிச்சை அளித்து நோய் மீண்டும் வருவதற்கான அபாயம் 0.5 சதவீதம் மட்டுமே உள்ளது.

நரம்பு சுருட்டல் பொதுவாக எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது, இதற்கு சிகிச்சை தேவையில்லை என்றே பலரும் நினைக்கிறார்கள். ஆனால், லேசான வலி அல்லது பாதிப்பு தென்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாட வேண்டும். எவ்வளவு விரைவாக செல்கிறோமோ, அவ்வளவு விரைவாக குணமடையலாம்.

### மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டுமா?

நரம்பு சுருட்டல் நோய்க்கு சிகிச்சை பெற்றால் அன்றைய தினமே வீட்டுக்குச் செல்லலாம். மூன்று நாட்களுக்கு ஓய்வு பரிந்துரைக்கப்படும். மூன்று வாரங்களுக்கு நீண்ட பயணங்கள் தவிர்க்கப்படவேண்டும்.

## தவக்கால சிந்தனை



### மரியா நறுமணத் தைலத்தை இயேசுவின் காலடிகளில் பூசி தமது கூந்தலால் துடைத்தார்

பாஸ்கா விழாவுக்கு ஆறு நாட்களுக்கு முன்பு இயேசு பெத்தானியாவுக்குச் சென்றார். அங்குதான் இயேசு இலாசரை உயிர்த்தெழச் செய்தார். அங்கு அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது. மார்த்தா உணவு பரிமாறினார். இயேசுவோடு பந்தியில் அமர்ந்திருந்தவர்களுடன் இலாசரும் இருந்தார். மரியா இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத் தைலம் ஏறக்குறைய முந்நூற்று இருபது கிராம் கொண்டுவந்து இயேசுவின் காலடிகளில் பூசி, அதனைத் தமது கூந்தலால் துடைத்தார். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது.

இயேசுவின் சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவனுமான யூதாசு இஸ்காரியோத்து இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்துக்கு விற்று அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா? என்று கேட்டான். ஏழைகள்பால் கொண்டிருந்த அக்கறையினால் அல்ல மாறாக அவன் ஒரு திருடனாய் இருந்ததால்தான் இப்படிக் கேட்டான். பணப்பை அவனிடம் இருந்தது. அதில் போடப்பட்ட பணத்திலிருந்து அவன் எடுத்துக் கொள்வதுண்டு. அப்போது இயேசு மரியாவைத் தடுக்காதீர்கள். என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும். ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள். ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை என்றார். இயேசு அங்கு இருப்பதை அறிந்த யூதர்கள் பெருந்திரளாய் வந்தார்கள். அவர்கள் இயேசுவை முன்னிட்டு மட்டுமல்ல, அவர் உயிர்த்தெழச் செய்திருந்த இலாசரைக் காண்பதற்காகவும் வந்தார்கள். ஆதலால் தலைமைக் குருக்கள் இலாசரையும் கொன்றுவிடத் திட்டமிட்டார்கள். ஏனெனில் இலாசரின் காரணமாக யூதர்களிடமிருந்து பலர் விலகி இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.

## நக்கல் நமசிவாயம்

புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை, வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை என்கிற சந்திரபாபுவின்ர பாட்டு சரியாத்தான் இருக்குதுங்கோ...



## இன்றைய நாளில்...

1829 – கொழும்பு, புறக்கோட்டை நூலகம் ஆரம்பிக்கப்பட்டது
1865 – ஆபிரகாம் லிங்கன் தனது கடைசி உரையை நிகழ்த்தினார்.
1957 – சிங்கப்பூரின் சுயாட்சிக்கு பிரித்தானியா ஒப்புதல் அளித்தது.
1970 – எப்பல்லோ 13 விண்கலம் ஏவப்பட்டது.



# மன அழுத்தத்தைக் குறைக்கிறதா உடற்பயிற்சி...?

உடல் இயக்கம் குறைந்துள்ள தற்போதைய நவீன காலத்தில் உடற்பயிற்சியின் அவசியம் குறித்து மருத்துவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். உடல் மற்றும் மனநிலையை சரியாகப் பராமரிக்க தினமும் 30 நிமிடமாவது இலேசான நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்துதான் பிரதானமாக இருக்கிறது. இதனால் தற்போது உடல்நோய்களை சமாளிக்கவும் சிலர் நோய்கள் வராமல் தடுக்கவும் உடற்பயிற்சி செய்கின்றனர்.

அதுபோல உடல் பருமன் என்ற பிரச்சினையும் தற்போது பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகிறது. உணவு பழக்கவழக்கங்கள், உடல் இயக்கமின்மை, மன அழுத்தம் என இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. உடல் பருமன் பிரச்சினையால் நீரிழிவு நோய், இதய நோய் என பல நோய்த்தாக்கம் ஏற்படுவதால் உடலைக் குறைக்க பலரும் பல வழிகளில் முயல்கின்றனர்.

அந்தவகையில், உடற்பயிற்சி செய்வது மன அழுத்தத்தையும் குறைக்கும் என்றும் மனநலம் மேம்பட உதவும் என்றும் தொடர்ந்து சொல்லப்பட்டு வந்தாலும் அதுகுறித்த ஆய்வுகளும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

சமீபத்தில், ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட புதிய ஆய்வின்படி, அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்தால் அடுத்த 75 நிமிடங்களுக்கு மன அழுத்தம் குறைவதாகக் கண்டறிந்துள்ளனர். இந்த ஆய்வின் முடிவுகள் ப்ரொண்டியர்ஸ் இன் சைக்காட்ரி (Frontiers In Psychiatry) என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

ஆய்வில் பல்வேறு விதமான உடற்பயிற்சிகளும் அவற்றின் உடல் மற்றும் மன விளைவுகளும் கணக்கெடுக்கப்பட்டன. ஒவ்வொரு பயிற்சிகளுக்கும் ஏற்ப மனநலம் மேம்பட்டது கண்டறியப்பட்டது. அதில் குறைந்தது 30 நிமிடம் உடற்பயிற்சி செய்பவர்களுக்கு மனநலம் மேம்பட்டுக் காணப்பட்டதாகவும் மிதமான நடைப்பயிற்சி மட்டும்கூட போதுமானது என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உணவுகள் மட்டுமன்றி சுற்றுச்சூழல் காரணங்களால் உடல் பிரச்சினைகள் வருவது இனிவரும் காலங்களில் தவிர்க்க முடியாததுதான். ஆனால், நோய்களில் இருந்தும் மன அழுத்தத்தில் இருந்தும் நம்மைக் காத்துக்கொள்ளும் தேவையும் அவசியமும் இருக்கிறது.

அந்தவகையில் உடற்பயிற்சி செய்வது நினைவகத் திறனையும் மேம்படுத்தும் என்றும் பல ஆய்வுகள் கூறுகின்றன. தினமும் 30 நிமிடமாவது இலேசான உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள். அதனையும் அதிகாலை அல்லது காலை வேளையில் செய்தால் உடலையும் மனதையும் புத்துணர்ச்சியுடன் வைத்துக்கொள்ளலாம்.

சிறு குழந்தைகளுக்குக்கூட மன அழுத்தம் வரும் இந்த காலகட்டத்தில் அவற்றைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். அந்த முயற்சிகளில் உடற்பயிற்சிக்கு முன்னுரிமை கொடுக்கலாமே!



# பத்து நாட்களாக எரிபொருள் இல்லை; ஆனமடுவவில் வீதியை மறித்துப் போராட்டம்



ரஸீன் ரஸ்மின்

ஆனமடுவ - குருநாகல் பிரதான வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக வீதியை மறைத்து வாகன சாரதிகள் நேற்று (10) ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

கடந்த 10 நாட்களாக தமக்கு எரிபொருள் வழங்கப்படாமையை கண்டித்தே சாரதிகள் பிரதான வீதியை மறைத்து வாகனங்களை நிறுத்தி குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனமடுவ - குருநாகல் வீதியிலுள்ள குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசல் விநியோகிக்கத் தவறியுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இதனால் தமது வாகனங்களுக்கு டீசல் பெறுவதற்காக எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் ஐந்தாறு நாட்கள் அங்கேயே காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

டீசலை பெற்றுக்கொள்வதற்கு தாம் ஏற்கனவே பணம் செலுத்தியுள்ளபோதிலும் இதுவரை டீசல் வழங்கப்படவில்லை என எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்ததாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதன்போது அங்கு வருகை தந்த ஆனமடுவ பொலிஸார், பிரதான வீதியின் போக்கு வரத்துக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் எனவும் இதுபற்றி பேசி முடிவெடுக்கலாம் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கூறிய போதிலும், அதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் கட்டுப்பட மறுத்துவிட்டனர்.



ஹட்டனில் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் மக்கள் நேற்று காத்திருந்தனர். (படப்பிடிப்பு: மனூர சுதத் செல்லஹேவா)

# ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெஹிஅத்தகண்டியில் தெரிவிப்பு





மக்களை அழித்து, நாட்டிற்கு அழிவை கொண்டுவந்த ராஜபக்ஷ தலைமுறையையும், ராஜபக்ஷ அரசாங்கத்தையும் நிச்சயமாக வீட்டுக்கு அனுப்புவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அத்துடன் மாத்திரம் நின்றுவிடாது வரம்பற்ற நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறை முற்றாக இல்லாமல் ஒழிக்கப்படும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதனை நிறைவேற்றும் பொருட்டு மக்கள் ஆசியை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைந்த ஐக்கிய கமத்தொழிலாளர் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயிகளின் பேரணி நேற்று முன்தினம் (09) தெஹிஅத்தகண்டி நகரில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமை தாங்கியிருந்ததோடு, அப்பகுதி விவசாயிகள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவாக கையை உயர்த்தி ஆதரவு தெரிவிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்ததோடு, பேரணியில் கலந்துகொண்ட மக்கள் பதிலுக்கு கைகளை உயர்த்தி அதற்கு ஆதரவாக பதிலளித்தனர்.

ஜனாதிபதி பதவியாக இருக்கட்டும், பிரதமர் பதவியாக இருக்கட்டும், அது ஓர் அமைச்சுப் பதவியாக இருக்கட்டும், நாடாமன்ற உறுப்பினர் பதவியாக இருக்கட்டும், இவை அனைத்தும் தங்கள் குடும்ப வயிற்றை நிரப்பிக்கொள்வதற்கான தொழிலாக கருதிக்கொள்ளக்கூடாது என்பதை அவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டு மக்களின் நலன் மேம்பாட்டிற்காவே மக்கள் இந்தப் பதவிகளை வழங்குகிறார்கள் என்பதை மனதிற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சீர்கெட்ட ராஜபக்ஷ ஆட்சியின் முடிவு மிக அருகில் உள்ளது எனக்கூறிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டையும் மக்களையும் அழிவுக்கு இட்டுச்சென்ற ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக பொதுமக்களும் அணிதிரண்டுள்ளதாகவும் கூறினார்.







நுவரெலியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் தொழில் புரியும் தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் ஊழியர்கள் மற்றும் மதகுருமார்கள் ஒன்றிணைந்து அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உணவுப்பொருட்களின் விலை உயர்வை கண்டித்தும், ஜனாதிபதி உள்ளிட்ட இந்த அரசாங்கம் பதவி விலகவேண்டும் என கோரி நேற்று முன்தினம் (09) நுவரெலியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படங்கள் - தலவாக்கலை நிருபர்)

# கொழும்பில் சில பகுதிகளில் வெள்ளம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

நாட்டின் பல பாகங்களில் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்று மதியம்வரை பெய்த தொடர்ச்சியான மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

கொழும்பில் சில பகுதிகளிலும் வெள்ளத்தை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. குறிப்பாக, கொழும்பு ஆமர் வீதிப் பகுதியில் கொட்டாஞ்சேனை - ஆமர் வீதியின் இரண்டு பக்கமும் நீரில் மூழ்கியதால் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. அத்துடன், மக்கள் நடமாட முடியாத நிலைமைகளும் காணப்பட்டன.

ஒருசில இளைஞர்கள் வீதியில் தேங்கியுள்ள நீரை கழிவுநீர்க்குழாயினூடாக அனுப்பும் பணிகளில் ஈடுபட்டதால் வீதியை மூடிக் காணப்பட்ட நீர் ஓரளவு குறைந்ததை அவதானிக்க முடிந்தது.

# மட்டக்களப்பு கரடியனாறு ஈரக்குளத்தில் யானை தாக்கி விவசாயி ஒருவர் பலி!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு கரடியனாறு ஈரக்குளத்தில் யானை தாக்கி விவசாயி ஒருவர் பலியான சம்பவமொன்று நேற்று முன்தினம் (09) இடம்பெற்றுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விதம் பலியானவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் தங்கராசா (வயது - 55) எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

குறித்த நபர் பயிர்ச்செய்கை நடவடிக்கையிலும், மாடு வளர்ப்பிலும் ஈடுபட்டு வருபவரெனவும், சம்பவ தினமான நேற்று முன்தினம் பால் கறப்பதற்காக தனது மாடுகளைத் தேடிச் சென்றபோது, மறைந்திருந்த யானையொன்று அவரைத் தாக்கியுள்ளதெனவும் இதனால் அவர் சம்பவ இடத்திலேயே பலியானதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்தது.

கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேசத்திற்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் சடலத்தைச் சென்று பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காலாவதியான செமன் தொகையை பாழடைந்த கிணறொன்றில் வீசிய மூவர் பொலிஸாரால் கைது

செமன் உற்பத்தித் தொழிற்சாலையொன்றில் பழுதடைந்த துர்மணம் வீசிய 15 செமன் பீப்பாய்களை மாரபொல கிராமத்திலுள்ள இடமொன்றில் அமைந்துள்ள பாழடைந்த கிணறொன்றில் வீசிக்கொண்டிருந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதால வெயாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

பேலியகொடை பிரதேசத்தில் அமைந்துள்ள செமன் உற்பத்தித் தொழிற்சாலையில் பழுதடைந்த செமன் தொகையை ரின்களில் இருந்து அகற்றி 15 பாரிய பீப்பாய்களில் எடுத்துவந்து, குளிரூட்டல் வசதிகொண்ட லொறியொன்றில் வைத்து மாரபொலி பிரதேசத்திலுள்ள அமைந்துள்ள பாழடைந்த கிணற்றில் வீசிக்கொண்டிருந்தபோது குறித்த லொறியுடன் சந்தேகநபர்களை கைதுசெய்யக் கூடியதாக இருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாரபொல, தனமல்வில மற்றும் கலேவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாரபொல பிரதேசத்தைச் சேர்ந்த நபருக்கு பணம் கொடுத்து இந்த கழிவு செமன் தொகையை கிணற்றில் வீசியுள்ளதகவும், இந்த நடவடிக்கை நீண்டகாலமாக இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துர்மனம் அதிகமாக வீசியதால் மாரபொல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரினால் வழங் கப்பட்ட தொலைபேசி அழைப்பின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காலாவதியாகி பழுதடையும் ரின் மீன்களை விற்பனை நிலையங்களினால் மீண்டும் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், தொழிற்சாலையில் வைத்து ரின்களிலிருந்து மீன்களை நீக்கிவிட்டு பீப்பாய்களில் அவற்றை எடுத்துவந்து கிணற்றில் வீச நடவடிக்கை எடுத்துள்ளமை விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது.

# மெதிரிகிரியவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு யுவதியொருவர் கொலை

(அநுராதபுரம் செய்தியாளர் )

ஆடைத் தொழிற்சாலையில் சேவை செய்யும் பெண்ணொருவர் கூரிய ஆயுதமொன்றில், தாக்கப் பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளதாக மீகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று (10) அதிகாலை மெதிரிகிரிய, அம்பகஸ்வெவ பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சம்பவத்தில் மீகஸ்வெவ, அம்பகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தப்பிச்செல்ல முயற்சித்த சந்தர்ப்பத்தில் அவரை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் ஹிங்குரன்கொட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# (மேஜர்) பிரதீப் உந்துகொட மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

(மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''(மேஜர்) பிரதீப் உந்துகொட மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) வறியோர் அநாதைகள் மற்றும் நோயாளர்களுக்கு வைத்திய நிவாரணம், உணவு, உடை அத்துடன் உறைவிடங்களை வழங்குதல்.

(ஆ) வறிய பாடசாலைச் சிறுவர்களுக்கென விசேட சேவைகளை நடாத்துதலும் கல்விக்கென புலமைப்பரிசில்கள், நூலக வசதிகள் மற்றும் வேறு அவசியமான ஆதரவு மூலமாக உதவிகள் வழங்குதல்.

(இ) சிரேஷ்ட பிரஜைகளின் இயக்கங்களினால் ஆற்றப்படும் சேவைகளுக்கு ஆதரவளித்தலும் ஊக்கமளித்தலும்.

பிறவும்.

(மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய
பாராளுமன்ற உறுப்பினர்

# ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் தமிழகத்தில் தஞ்சம்

## சர்வதேச கடல் எல்லையில் கண்காணிப்பை தீவிரப்படுத்த இந்தியா நடவடிக்கை

(மன்னார் நகர் நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக மக்கள் உணவு, அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் இலங்கையிலிருந்து தனுஷ்கோடிக்கு வந்த 20 இலங்கை தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று (10) அதிகாலை இரண்டு கைக்குழந்தையுடன் 5 குடும்பத்தைச் சேர்ந்த மேலும் 19 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடியை வந்தடைந்துள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், தனுஷ்கோடி இலங்கைக்கு அருகே உள்ளதால் இலங்கை தமிழர்கள் இறுதிக்கட்ட போரின் போது அகதிகளாக தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்குள் வந்த இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களில் தங்கியுள்ளனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் கடும் விலையேற்றம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக இலங்கை தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வரக்கூடும் என்பதால் சர்வதேச கடல் எல்லை பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என இந்திய கடலோர பாதுகாப்பு குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்ததாக இந்தியத் தகவல்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் (9) இரவு படகொன்றில் திருகோணமலையை சேர்ந்த 10 பேர் இரண்டு கைக்குழந்தைகளுடன் மன்னாரில்







இருந்து புறப்பட்டு நேற்று (10) அதிகாலை சுமார் 2 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை ஒன்றாம் மணல் திட்டில் வந்திறங்கியுள்ளனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ராமேஸ்வரம் மெரைன் பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மெரைன் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேபோல் மன்னாரில் இருந்து நேற்று முன்தினம் (9) இரவு யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரை சேர்ந்த 9 பேர் மன்னாரில் இருந்து புறப்பட்டு நேற்று (10) அதிகாலை தனுஷ்கோடி வந்திறங்கி, பின்னர் அரச பஸ் மூலம் தானாக மண்டபம் அகதிகள் முகாமிற்கு சென்றுள்ளனர். இது குறித்து தகவலறிந்த மண்டபம் மெரைன் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரணை செய்து வருகின்றனர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணையின் பின்னர், 19 இலங்கை தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படுவார்கள் என மெரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு





(இக்பால் அலி)

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு மானவனல்லைப் பிரதேசத்தில் உலருணவுப் பொதிகள் மாவனல்லை கிளசிக் கிரியசென் நிறுவனத்தின் அலுவலகத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

சமகால பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்திற் கொண்டு இந்த உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தொழிலதிபரும் கிளசிக் கிரியேஷன் நிறுவனத்தின் தலைவருமான எம். எம். பதூத்தினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது ரூபா 6,500 பெறுமதியான உலருணவுப் பொதிகள் 200 குடும்பத் தாய்மார்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

10 கிலோ அரிசி, பருப்பு, சீனி உள்ளிட்ட பல அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# இலங்கைக்கு ஐஸ் போதைப்பொருள் கடத்த முயற்சித்த இருவர் இந்தியாவில் கைது



(மன்னார் நகர் நிருபர்)

ராமேஸ்வரத்திலிருந்து கடல் வழியாக படகு மூலம் இலங்கைக்கு கடத்த முயன்ற ஒரு கோடி மதிப்பிலான ஐஸ் போதைப்பொருள் நேற்று முன்தினம் (09) கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலுமொருவர் தேடப்பட்டு வருகிறார்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு சமீப காலமாக கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

தமிழகத்திலிருந்து கடல் அட்டைகள், மஞ்சள், கஞ்சா உள்ளிட்டவை கடத்தப்பட்டு வருகின்றன. இதனால் மத்திய, மாநில உளவுத்துறை பொலிஸார், கடலோர பாதுகாப்பு பொலிஸார், கடலோர காவல் படையினர் மற்றும் பொலிஸார் கண்காணிப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் (09) போதைப்பொருள் கடத்தப்படவிருப்பதாக ராமேஸ்வரம் குற்றப்பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நேற்று சனிக்கிழமை மாலை ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் சிறப்பு குற்றப்பிரிவு பொலிஸார் மறைந்திருந்தனர்.

அப்போது தங்கச்சிமடம் பெட்டேல் நகரை சேர்ந்த பிரைட்வின் என்பவருக்கு சொந்தமான மீன்பிடி விசைப் படகில் மீன் பிடிக்கச் செல்லும் ஒருவரை குற்றப்பிரிவு பொலிஸார் அவதானித்துள்ளனர்.

இதனை கண்ட குற்றப்பிரிவு பொலிஸார் அவரை மடக்கி பிடித்து சோதனை செய்ததில் குறித்த பையில் கிறிஸ்டல் மெத்தம் பீட்டாமைன்



என அழைக்கப்படும் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, படகின் உரிமையாளர் பிரைட்வின் மற்றும் அக்காள் மடம் புயல் காப்பகம் பகுதியைச் சேர்ந்த டெஸ்மன் ஆகிய இருவரையும் கைது செய்த பொலிஸார் இந்த கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய முத்துப்பாண்டி என்பவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கிறிஸ்டல் மெத்தம் பீட்டாமைன் என்ற ஐஸ் போதைப்பொருள் உண்மையானதா? என்பது குறித்து ராமநாதபுரத்தில் உள்ள தடயவியல் பொலிஸார் இரசாயனம் மூலம் பரிசோதனை செய்து கிறிஸ்டல் மெத்தம் பீட்டாமைன் என்று உறுதிப்படுத்தினர்.

ராமேஸ்வரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 957 கிராம் ஐஸ் போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு ஒரு கோடி ரூபா என பொலிஸார் தெரிவித்துள்ளனர். கோடிக்கணக்கான ரூபா மதிப்பிலான கடத்தல் போதைப்பொருள் பிடிபட்டதையடுத்து கடலோரப் பகுதிகளிலும், இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லையிலும் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.





அரசாங்கத்துக்கு எதிராக காலி முகத்திடலில் நேற்றுமுன்தினம் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டபோது அதில் கலந்துகொண்ட முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபடுவதையும் நோன்பு திறப்பதையும் படங்களில் காணலாம்.

# மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்து கோட்டா பதவி விலக வேண்டும்

## ரிஷாட் எம்.பி. வலியுறுத்து

(ரஸீன் ரஸ்மின்)

மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்து ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ உடனடியாக பதவி விலக வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம் ஹூஸைனியா புரம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் இவ்வாறு கூறினார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்று 69 இலட்சம் மக்கள் வாக்களித்தனர்.

ஆனால், இன்று இந்த ஆட்சி மீதும், ஜனாதிபதி மீதும் நம்பிக்கையிழந்துள்ள மக்கள் ஜனாதிபதி நாட்டை ஆட்சி செய்வதற்கு தகுதியில்லாதவர் எனவே அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று கோரியே வீதியில் இறங்கி போராட்டங்களையும், பகிஷ்கரிப்புகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நாட்டின் பொருளாதாரம் பாரிய சரிவை எதிர்நோக்கியிருக்கிறது.

மக்கள் ஒருவேளை உணவைக் கூட உண்பதற்கு போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை வரிசையில் காத்து நின்று கொள்வனவு செய்கின்ற நிலையும் காணப்படுகிறது.

ஆகவே, மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொடுக்க முடியாத ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும் என்பதே இந்த நாட்டில் வாழும் அதிகமான மக்களின் விருப்பமாக இருக்கிறது.

எனவே, மக்களின் விருப்பத்தை நிலை நாட்டுவதற்கு தேவையான அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் எமது கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றார்.

# சூதாட்டத்தில் ஈடுபட்ட 12 பேர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் விஜேபுர பகுதியிலுள்ள வீடொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த இரு பெண்கள் உட்பட 12 சந்தேக நபர்களை வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக் கமைய, நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் சூதாட்டத்திற்கு பயன்படுத்திய பணத்தினையும் அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம், விஜேபுர பகதி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தானியக்க துப்பாக்கி – தோட்டாக்களுடன் நபரொருவர் கொழும்பில் கைது

கொழும்பு கரையோர பொலிஸ் பிரிவில் 9 எம்.எம். வகையைச் சேர்ந்த தானியங்கி துப்பாக்கி, பிஸ்டோல் மற்றும் பயன்படுத்தாத 4 தோட்டாக்களுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தொடர்பில் கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நளின் சியந்தவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, ராமநாதன் தொடர்மாடிக்குடியிருப்புக்கு அருகில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். இது செய்யப்பட்டதன் பின்னர் சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போதே, இந்த துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்தியாவிலிருந்து உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் என்பவற்றை இறக்குமதி செய்யும் மொத்த வியாபாரியாக வருகை தந்திருந்த குறித்த சந்தேகநபர் இதற்கு முன்னர் 16 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் மருதானை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்ததாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பு - 13, ஜம்பட்டா வீதி பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கு இந்த துப்பாக்கி எவ்வாறு கிடைத்தது, எந்த நோக்கத்துக்காக துப்பாக்கி வைத்திருந்தார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

புனித ரமழானை முன்னிட்டு தேவையுடைய 300 இற்கும் மேற்பட்ட ஏழைக் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் இளம் பெண்கள் மாதர் அமைப்பினால் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், தமது சுயதொழிலை மேம்படுத்த ஏழைப் பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்றும் அமைப்பினால் வழங்கி வைக்கப்பட்டது.

தெமடகொடை வை.எம்.எம்.ஏ. தலைமைக் காரியாலயத்தில் இளம் பெண்கள் மாதர் அமைப்பின் தலைவி தேசமான்ய பவாஸா தாஹா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைப்பின் ஆலோசகர் காலித் பாறுக் மற்றும் அமைப்பின் காப்பாளர்களும் அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.





தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் 25 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வருடாந்தம் நடத்தப்படும் இலவச கண் பரிசோதனை கொழும்பு -14 இல் அமைந்துள்ள கலைமகள் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் முருகானந்தம், முன்னாள் தலைவர் என்.ராஜா, பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், பிரதி பொதுச்செயலாளர் மாவை. சோமசுந்தரம், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி, ஊடகச் செயலாளர் ஈஸ்வரலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறுவனொருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

நெலுவ பிரதேசத்தில் சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தனது தாயுடன் சிறுவர்கள் நால்வர் எம்பலேகெதர வீதி நீரில் மூழ்கியிருந்த நிலையில் இங்னல் தொல வீதிக்கு செல்ல முயற்சித்தபோது சிறுவர்களில் ஒருவர் நீரில் அடித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அதனைத் தொடர்ந்து பொலிஸார், பிரதேசவாசிகள் இணைந்து தேடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில், சிறுவன் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எம்பலேகெதர பிரதேசத்தைச் சேர்ந்த 08 வயதுடைய சிறுவனொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# நான்கு வருடங்களாக பராமரிப்பின்றி காணப்பட்ட மின்பிறப்பாக்கிக்கு பாதுகாப்பு கொட்டகை



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தி யசாலையில் நான்கு வருட காலமாக எந்தவிதமான பராமரிப்புமின்றிக் காணப் பட்ட மின்பிறப் பாக்கியை (ஜெனரேட்டர்) பராமரிப் பதற்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கைகளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகம் முன்னெடுத்துள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு தொடக்கம் எந்தவித பராமரிப்புமின்றி வெயில் மற்றும் மழைக்கு மத்தியில் காணப்பட்ட 100 மெகா வோட்ஸ் சக்தி கொண்ட மின்பிறப்பாக்கியை மழை மற்றும் வெயில் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க கடந்த வெள்ளிக்கிழமை (08) தகரக் கொட்டகை இடப்பட் டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மின் வெட்டு நேரத்தில் இருளில் மூழ்குவதாகவும், மின்பிறப்பாக்கி ஒன்று பராமரிப்பின்றி கைவிடப் பட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன், இது தொடர்பாக கடந்த வாரம் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் பேசி மின்பிறப்பாக்கியை பாதுகாப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்திருந்த நிலையில் மின்பிறப்பாக்கிக்கு பாதுகாப்பு கொட்டகை இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மானிப்பாயில் இடி விழுந்து வீடு சேதம்!



(யாழ். நிருபர்)

இடி விழுந்து வீடொன்றின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதுடன், மோட்டார்சைக்கிள் ஒன்றும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

யாழ்ப்பாணம், மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்குக்கு அருகிலுள்ள வீடே சேதமாகியுள்ளது.

யாழில் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்தது. இந்நிலையில், குறித்த வீட்டின் மீது இடி விழுந்ததில் வீட்டின் முன் பகுதியும், முன் பகுதியுடன் இணைத்து போடப்பட்டிருந்த கொட்டகையும் சேதமடைந்துள்ளன.

அத்துடன் கொட்டகைக்குள் நின்ற மோட்டார்சைக்கிள் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

# வவுனியாவில் மதகுருமார் அமைதிப் பேரணி








(வவுனியா நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையிலிருந்து நாடு மேம்படவேண்டி 'தந்தையே எமது தேசத்தை விழித்தெழச் செய்வீர்' என்ற தொனிப்பொருளில் அமைதிப் பேரணியொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. கிறிஸ்தவ மதகுருமாரினால் ஏற்பாடுசெய்யப்பட்ட குறித்த பேரணியானது, வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டத்தினை வந்தடைந்து அவ்விடத்தில் சிறிதுநேரம் அமைதியான முறையில் தமது சுலோகங்களை காட்சிப்படுத்தியிருந்தனர்.

இதன் பின்னர் கண்டி வீதி வழியாக பழைய பஸ் நிலையத்தினை வந்தடைந்த பேரணியினர் அங்கும் தமது சுலோகங்களை காட்சிப்படுத்தியிருந்தனர்.

கிறிஸ்தவ அருட்தந்தையர், அருட் சகோதரிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட சுமார் 70 பேர் வரையில் கலந்துகொண்ட குறித்த பேரணியில் "ஒரு நாடும் 225 திருடர்களும், இலங்கையர் என்ற அடையாளத்தைக் கட்டியெழுப்புவோம், அரசியல்வாதிகளே இனவாதம் பேசுவதைத் தவிருங்கள், புதிய அரசியலமைப்பில் நீதி கிட்டுமா, மூன்றுவேளை உணவு ஒருவேளை உணவானது" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியிருந்தனர்.

# யாழ். மகளிர் விவகாரக் குழுக்கள் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் - புதிய நிர்வாகத் தெரிவு 2022



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்கள் சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (08) காலை மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர், பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மட்ட மகளிர் விவகார சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய நிர்வாகம் தெரிவு



(யாழ். நிருபர்)

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் காணப்பட்ட பல்வேறு சர்ச்சைகளுக்கு முடிவுகட்டி புதிய நிர்வாகம் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவுசெய்யப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றபோதே நிர்வாகத் தெரிவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி அக்கட்சியின் தலைவராக சட்டத்தரணி பரமசிவம் ஸ்ரீதரனும் கட்சியின் செயலாளர் நாயகமாக அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட வீ.ஆனந்தசங்கரியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும், அக்கட்சியின் மகளிர் பேரவைத் தலைவியாக சூரியமூர்த்தி சூரியபிரதீபா வாசவன் தெரிவுசெய்யப்பட்டார்.

அண்மைக்காலமாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பல்வேறு சர்ச்சைகள், நிர்வாகங்களில் ஏற்பட்ட குழப்பங்களை அடுத்தே இந்த புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் தேசிய மாநாடு என்பவற்றை மிக விரைவில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி ஜனாதிபதிக்கு கடிதம்

## சாவகச்சேரி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(சாவகச்சேரி நிருபர்)

நாட்டில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் குறித்த சட்டத்தின் கீழ் கைதானவர்களை விடுதலைசெய்ய வலியுறுத்தியும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்ப சாவகச்சேரி பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் சமர்ப்பித்த பிரேரணைக்கு ஆதரவளித்து சபையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் தனது பிரேரணையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆதாரபூர்வமற்ற பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து பல அப்பாவிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் கைதானவர்களை பிணை யிலோ அல்லது முழுமையாகவோ விடுதலை செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை சபையில் ஏகமனதாக நிறைவேற்றி தீர்மானப் பிரதியை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். குறித்த பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு தீர்மானப் பிரதியை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

# சாவகச்சேரி வைத்தியசாலை பணியாளர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பணியாளர்கள் பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டி கடந்த வெள்ளிக்கிழமை (08) மதியம் வைத்தியசாலை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

"இலவச சுகாதாரம் ஆபத்தில் உள்ளது அனைவரது உயிர்களும் ஆபத்தில் உள்ளன, நாம் மக்களது உயிர்களை தியாகம் செய்கிறோமா?, மருந்துகள் இல்லை; சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது; சுகாதார வசதிகளை இல்லாதொழிக்க வேண்டாம், நோயுற்றவர்களின் உயிரைக் காப்போம், தேவையற்ற செலவைக் கட்டுப்படுத்துங்கள், சுகாதார சேவைகள் கட்டமைப்பிற்கு நிதியை முன்னுரிமைப்படுத்துங்கள்" உள்ளிட்ட சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவண்ணம் குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை பணியாளர்கள் குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

# மன்னாரில் இடர்கால நிவாரண உதவித் திட்டம் அரச அதிபரால் ஆரம்பித்துவைப்பு

## வடக்கில் 1,200 குடும்பங்களுக்கு வழங்க மெசிடோ நிறுவனம் நடவடிக்கை







(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு இடர்கால நிவாரணம் நேற்று முன்தினம் சனிக்கிழமை (09) காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக வடக்கில் பல நூற்றுக்கணக்கான பின்தங்கிய குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின்(மெசிடோ) ஏற்பாட்டில் வடக்கில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களிலும் முதல் கட்டமாக 1,200 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு இடர்கால நிவாரண உதவியாக சுமார் 3,500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அதற்கமைவாக நேற்று முன்தினம் ஆரம்ப நிகழ்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அதிகாரி மற்றும் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே.யாட்சன் பிகிறாடோ மற்றும் குறித்த நிறுவனத்தின் பணியாளர்கள் இணைந்து அத்தியாவசிய உலருணவுப் பொருட்களை வழங்கினர்.

இதன்போது மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட வறுமைக்கோட்டுக்குட்பட்ட 100 குடும்பங்களுக்கு குறித்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

திகதி 09.04.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4732
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,785,270.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 9 9 9 1 3 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,733,157.00

திகதி 08.04.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4731
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,199,190.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 0 6 1 2 2 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,828,361.00

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 09.04.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1234
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,974,880.00
வெற்றி இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 0 0 7 3 5 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,904,763.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 761
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,422,980.00
வெற்றி இலக்கினம் F வெற்றி இலக்கங்கள் 05 34 49 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,946,922.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 762
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,113,200.00
வெற்றி இலக்கினம் X வெற்றி இலக்கங்கள் 15 28 37 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,155,412.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0040
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,547,020.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 15 30 35 46
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,651,225.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0041
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,630,140.00
இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 25 39 47 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,692,342.60


கோடி 23+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1079
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,869,700.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 246,651,402.00
N 08 10 15 24 37
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00


கோடி 23+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1080
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,744,320.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 246,726,618.00
H 25 03 11 36 50
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# மட்டக்களப்பில் எரிபொருளை பதுக்கிவைப்பதற்குத் தடை; சீரான முறையில் வழங்குவதற்கு ஆறு தீர்மானங்கள்

## அரச அதிபர் கருணாகரன் அறிவிப்பு


மாவட்ட செயலகம்,மட்டக்களப்பு.
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මඩකලපුව.
DISTRICT SECRETARIAT, BATTICALOA.
(Administration Unit)
ADM/GAGEN/2022(Tem)
08.04.2022
K. KARUNAKARAN
District Secretary / Government Agent



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருளை பதுக்கிவைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அனைவருக்கும் எரிபொருள் சீரான முறையில் வழங்குவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு அதற்கான 6 தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் அறிவித்துள்ளார்.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கடிதம் மூலமான அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையை கண்காணித்தல் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரசாங்க அதிபர் தலைமையில் கலந்துரையாடப்பட்டதுடன், 6 தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல எரிபொருள் நிலையங்களிலும் அரச வாகனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தேவைகளை நிறைவேற்றுதல், இலகுவாக நடைமுறைப்படுத்த காலை 8 மணி தொடக்கம் பகல் 12 மணிவரை நேர இடைவெளியில் வாகனங்களுக்கு எரிபொருளை நிரப்புதல், தற்போதைய நிலையில் சிறுபோக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் வழமைக்கு மாறாக எரிபொருள் தேவை அதிகரித்ததன் காரணமாக, எதிர்வரும் 2-3 வாரத்துக்குள் எரிபொருள் நெருக்கடியை தவிர்க்கும் முகமாக தனியார் ஒருவர் தனது பொருளாதார அத்தியாவசிய தேவை தவிர்ந்த வேறு நோக்கங்களுக்காக கொள்கலன்களில் எரிபொருள் நிரப்புவதை மட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதாகவும் மனைப்பொருளாதாரத்தை ஊக்குவிப்பதும் விவசாயம், கடற்றொழில், சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான எரிபொருள் வழங்குவது அவசியமென்பதனால் இதனை குறித்த பகுதி துறைசார் அதிகாரிகளின் சிபாரிசுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் மேற்குறித்த 3 விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை தவிர்ந்த ஏனைய விடயங்களுக்காக எரிபொருளை கொள்வனவு செய்து பதுக்கிவைப்பதை தடை செய்வது பொலிஸாரின் கடமை என்பதால் அவர்கள் மூலம் இதனை நிறைவேற்றுதல்.

எரிபொருள் சீரான விநியோகம் சம்பந்தமாக பிரதேச மட்ட எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களை அழைத்து அவர்களின் ஒத்துழைப்புடன் சரியான பொறிமுறை ஒன்றை நடத்திச்செல்லுதல் மற்றும் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் உள்ள தனியார் பஸ்கள் தமக்கு தேவையான எரிபொருளை இலங்கை போக்குவரத்து சபையில் அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணம் செலுத்தி கொள்வனவுசெய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது போன்ற 6 தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அந்த தீர்மானங்களை சகல பிரதேச செயலாளர்களுக்கும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பா.உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## போழியார் புலம்பல்!



**போராட்டம் நடக்கிதுதான். ஆனா அந்த மனிசன் ரோசம் போனாலும் பரவாய் இல்ல தான் போகமாட்டன் எண்டு ஒத்தக்காலில நிக்காரு. சும்மா சொல்லப்போடா பிடறியில புடித்து தள்ளினாலும் திரும்ப வந்து கதிரையில் குந்திற பரம்பரைதான் ராஜபக்ஷ பரம்பரை. ரோசம்கெட்ட குடும்பம் எலுவா..!**

**இப்ப அவருக்கு செம்பு தூக்கிற கொஞ்சப்பேர் அவருக்கு சார்பாகவும் ஆர்ப்பாட்டம் செய்யிறாங்க எலுவா. பகுடி என்னென்றால் மட்டக்களப்புலயும் அவரிட கோமணத்த கழுவி எலும்புத்துண்ட நக்கிற சிலர் இதில பின்னணியாம்!**

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# கிழக்கு மாகாண அமைச்சர் சுபைருக்கு சமாதானத் தூதுவர் விருது வழங்கிவைப்பு





(பொத்துவில் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலையான அபிவிருத்திக்கு, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பங்காற்றிய கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், ஏறாவூர் நகர சபை உறுப்பினருமான எம்.எஸ்.சுபைர் சமாதான தூதுவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை சமாதான கற்கைகளுக்கான நிலையம் ஒழுங்குசெய்திருந்த சர்வதேச கல்வி, சுற்றுலா தொடர்பான ஆராய்ச்சி மாநாடு அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சமாதான கற்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பலர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலையான அபிவிருத்திக்கு, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பங்காற்றிய கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், ஏறாவூர் நகர சபை உறுப்பினருமான எம்.எஸ்.சுபையிர் இம்மாநாட்டின்போது சமாதான தூதுவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் வெளிநாட்ட லுவல்கள் அமைச்சர் ரோஹித போகொல்லாகம, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப், முன்னாள் அமைச்சர் அலிசாஹிர் மௌலானா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு கல்வியலாளர்கள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தொண்டர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, சமாதான கற்கைகள் நிலையம் இவ்வாறான விருதுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்திற்கு எதிராக உயர் கல்வி மாணவர்கள், பிக்குகளால் திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்









(திருகோணமலை நிருபர்கள்)

திருகோணமலையில் அரசாங்கத்திற்கு எதிராகவும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வை கண்டித்தும் உயர் கல்வி நிறுவன மாணவர்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டம் திருகோணமலை உயர் கல்வி நிறுவன மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்று (10) காலை இடம்பெற்றது

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஒரேயொரு ஓட்டுல மக்கள் எல்லாம் ரோட்டில், அந்த ஒரே ஒரு பாட்டுல ஏமாந்தது மொட்டுல, டொலர் இல்ல நாட்டுல பெற்றோல் இல்ல செட்டுல், பால்மா இல்ல, வீட்டுல கரண்ட் இல்ல நைட்டில, பெண்கள் எல்லாம் வீட்டில ஆண்களெல்லாம் கேட்டில மற்றும் கேஸ் விலை கூடுது அது பாட்டுல பிள்ளைகள் எல்லாம் விறகு தேடுது காட்டுல என்ற கோஷங்களை எழுப்பியவாறு அரசுக்கு எதிராக குறித்த ஆர்ப்பாட்டத்தில் முன்னெடுத்திருந்தனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பாடசாலை புத்தகங்கள் பரீட்சை வினாத்தாள் களுக்கான காகிதம் எங்கே? சின்ன பிள்ளைங்க பாப்பாங்க போஜோ இந்த நாட்டுக்கு நீ தேவையில்லை நீ போ.. போ.. கல்வியையும் பொருளாதாரத்தையும் சீரழிக்கும் அடக்குமுறை, அதாரு அதாரு GOTA நீ ஒரு கோளாறு, சொத்து உரிமை பொறுப்பு 500இற்கு ஒரு கிலோ பருப்பு, பயமா இருக்கா கோட்டா SIR இதுக்குப் பிறகு இன்னும் பயங்கரமா இருக்கும் SIR, GITAவின் ஆட்சி இனிமேலும் வேண்டாம் நரக சுகம் அல்லவா... ஓட்டை போட்டு விட்டு நாட்டை விற்று விட்டோம்... பஞ்சம் இருக்கும் காரணத்தால் யாரும் இலங்கைக்கு வருவதில்லை மீறி அவன் இலங்கை வந்தால் கடைசி வரைக்கும் திரிவான் சிலிண்டர் உடன்... என்ற பதாகைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

மேலும் குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வலுவூட்டும் முகமாக திருகோணமலை மாவட்ட பிக்குகள் குழு ஒன்று திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இருந்து நடைபவனியாக குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து அரசுக்கு எதிரான குறித்த ஆர்ப்பாட்டத்தில் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணொருவரின் தங்க சங்கிலியை அறுத்தெடுத்த ஐந்து பெண் கொள்ளையர்கள் மட்டக்களப்பில் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள சித்தாண்டி வாராந்த சந்தையில் மரக்கறி கொள்வனவு செய்ய சென்ற பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலி ஒன்றை அறுத்து கொள்ளையடித்த 5 பெண்களை கைதுசெய்துள்ள சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் வாராந்த சந்தை வழமைபோல இடம்பெற்றது. இதன்போது மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு அங்குசென்ற 60 வயதுடைய பெண் ஒருவர் மரக்கறிகளை கொள்வனவு செய்துகொண்டிருந்தபோது, அதிகமான சன நெரிசலில் கொள்ளையர்கள் பொருட்களை கொள்வனவு செய்யும் பாசாங்குடன் குறித்த பெண்ணின் கழுத்தில் இருந்த ஒரு பவுண் தங்க சங்கிலியை அறுத்து எடுத்தபோது அவர் சத்தமிட்டதையடுத்து அங்கிருந்த பொதுமக்கள் கொள்ளையர்களை மடக்கிப்பிடித்தனர்.

இதனையடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு கொள்ளையர்களை கைதுசெய்ததுடன், அறுத்தெடுத்த தங்க சங்கிலியை மீட்டதுடன் இதில் கைது செய்யப்பட்டவர்கள் களுத்துறை இங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 35 தொடக்கம் 50 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக பார்த்தீபன் நியமனம்

(சீனக்குடா நிருபர்)



திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் எஸ்.பார்த்தீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு திறந்த போட்டிப்பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவைக்கு இணைக்கப்பட்ட இவர், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் உதவிச்செயலாளராக கடமையாற்றிவந்தவேளை இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவர் இந்நியமனத்திற்கு மேலதிகமாக கிழக்கு மாகாண கூட்டுறவு பிரதி ஆணையாளராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூர் கடலில் நீராடச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

**ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கடலில் நண்பர்களுடன் நீராடச்சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை (07) மாலை 6 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.**

**ஆறுமுகத்தான் குடியிருப்பு காளிகோவில் வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய கணேஸ் விமலராஜா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.**

**குறித்த நபர் ஏறாவூர் கடற்கரையில் நீராடச்சென்ற நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இதனையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.**

# திருகோணமலையில் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சிறுபோக பயிர்ச்செய்கை ஆரம்பிக்க கலந்துரையாடல்

## தேவையான பசளைகள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கிவைப்பு

(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை மாவட்ட அல்லை பிரதேச விவசாயிகளுக்கான சிறுபோக பயிர்ச்செய்கை தொடர்பானகூட்டம் அண்மையில் சேருவில பிரதேச செயலகத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தற்போது சேதன விவசாயத்தை அடிப்படையாகக்கொண்டு விவசாய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. தற்போது சிறுபோகத்திற்கு அவசியமான சேதன கூட்டு, திரவப் பசளைகள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அதேபோன்று தேவையான நீர்ப்பாசன விநியோக முறையை கிரமமாக மேற்கொள்ள நீர்ப்பாசன திணைக்களம் உறுதிபூண்டுள்ளது. எனவே, விவசாயிகள் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம் எமக்குத் தேவையான அரிசியை எங்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமெனக் கூறினார்.

இதன்போது சேருவில பிரதேச செயலாளர் பி.ஆர்.ஜயரத்ன கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தின் அல்லை விவசாயத் திட்டம் மிக முக்கியமான ஒரு திட்டமாகும். சிறுபோகத்தில் 25,000 ஏக்கர் பரப்பளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது. கடந்த பெரும்போகத்தில் 48 வீதமான அறுவடையே கிடைக்கப்பெற்றது.





எனவே, இம்முறை சிறுபோகத்தில் குறிப்பிடத்தக்களவு காணிகளை மேற்கொள்வதன் மூலம் எங்களுடைய உணவு உற்பத்தித் தேவையை இதன்மூலம் ஓரளவு நிவர்த்திசெய்யக் கூடியதாக இருக்கும். ஏற்கனவே நடைபெற்ற சிறுபோக முன்னாயத்த தொடர்பான கூட்டத்தில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அந்த கூட்டத்தீர்மானங்களை அவ்வாறே செயற்படுத்த விவசாயிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்படி எதிர்வருகின்ற 20ஆம் திகதி சிறுபோக பயிர்ச்செய்கைக்கான நீர் விநியோக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதேபோன்று மூன்று தொடக்கம் மூன்றரை மாதங்கள் வரையிலான விதைநெல்லை பயன்படுத்துவதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, குறித்த தீர்மானங்களை விவசாயிகள் பின்பற்றி செயற்படுமாறு கேட்டுக்கொண்டார்.

விதைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உழவு இயந்திரங்களுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட முறை ஒன்றை ஏற்படுத்துமாறும் விவசாய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து எரிபொருள் வழங்க தேவையான நடவ டிக்கை எடுக்குமாறும் இதன்போது விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.


அதற்கு பதிலளித்த சேருவில பிரதேச செயலாளர், விவசாயிகளின் விதைப்பு நடவடிக்கைகளை கவனத்திற்கொண்டு விதைப்பு நடவடிக்கை இடம்பெறுகின்ற காலப்பகுதியில் கிடைக்கப்பெறுகின்ற எரிபொருளில் கூடிய அளவு எரிபொருளை விவசாயிகளுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு எரிபொருள் நிரப்பு நிலைய முகாமைத்துவத்திற்கு அறிவுரை வழங்குவதாகவும் விவசாய சங்கங்கள் சிறுபோகத்தில் ஈடுபடக்கூடிய விவசாயிகளுடைய பெயர், மேற்கொள்ளும் ஏக்கரளவு தொடர்பான விவரங்களை தமக்கு தெரியப்படுத்துமாறு இதன்போது சேருவில பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இம்முறை சிறுபோகத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 28,605 ஹெக்டயர் பரப்பளவில் நெல் விவசாயம் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவற்றுக்குத் தேவையான பசளை தேவைப்பாடு குறித்து உரிய அமைச்சுக்கு முன்னரே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இதன்போது கருத்துரைத்த தேசிய உரக் கூட்டுத்தாபனத்தின் உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.ஜி.எஸ்.பிரேமரத்ன தெரிவித்தார்.

அதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் சிறுபோகத்தில் உரிய பசளைகளை விநியோகிப்பதற்காக நான்கு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் உரிய கமநல சேவை நிலையத்துக்கு குறித்த பசளைகள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. தற்போது அவை ஏற்கனவே பயிர்செய்யப்பட்ட பிரதேசங்களுக்கு வழங்கப்பட்ட வருவதாக இதன்போது அவர் தெரிவித்தார்.

அத்துடன், விவசாய காப்புறுதி உள்ளிட்ட விடயங்கள் இன்னும் விவசாயிகளின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் என்பன இதன்போது ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கே.குகதாசன், திருகோணமலை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் அப்துல் ஜப்பார், திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# சித்திரைப் புத்தாண்டு சுபகிருது வருடம் - 2022

**வாக்கியப் பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை**

1ஆம் திகதி (14-04-2022) வியாழக்கிழமை காலை 7.50 மணிக்கு சுபகிருது வருடம் பிறக்கிறது.

**திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை**

1ஆம் திகதி (14-04-2022) வியாழக்கிழமை காலை 8.41 மணியளவில் சுபகிருது வருடம் பிறக்கிறது.

**வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்**

நல்ல சிவப்பு அல்லது மஞ்சள் நிறப் பட்டாடை அல்லது சிவப்பு கரை அமைந்த புதிய பட்டாடை அணிவது நல்லது.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்**

மஞ்சள் நிறப் பட்டு அல்லது மஞ்சள் கரை கொண்ட வெள்ளை வஸ்திரம்.

**வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி ஆபரணம்**

பவளம், புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஆபரணம்**

புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.

**தோஷ நட்சத்திரம்**

பரணி, மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம், பூராடம், உத்தராடம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதம்

**வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி கைவிசேட சுப நேரம்**

சித்திரை 1ஆம் திகதி (14-04-2022) வியாழக்கிழமை பகல் 7.57 முதல் 8.47 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15-04-2022) வெள்ளிக்கிழமை பகல் 7.52 முதல் 9.51 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15-04-2022) வெள்ளிக்கிழமை இரவு 6.12 முதல் 8.12 வரை



**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி கைவிசேட சுப நேரம்**

சித்திரை 1ஆம் திகதி (14-04-2022) வியாழக்கிழமை பகல் 8.50 முதல் 9.42 வரை

சித்திரை 2ஆம் திகதி (15-04-2022) வெள்ளிக்கிழமை பகல் 8.35 முதல் 9.50 வரை


**மருத்து நீர்**

வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கடப்பம் இலையும் காலில் கொன்றை இலையும் வைத்து ஸ்நானஞ் செய்ய வேண்டும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

**மருத்து நீர் தயாரித்தல்**

தாழம்பூ, தாமரைபூ,மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காச்சிக்கொள்க.



**வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலம்**


14-04-2022 அதிகாலை 3.50 மணி முதல் முற்பகல் 11.50 மணி வரை

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலம்**

14-04-2022 அதிகாலை 4.41 இல் இருந்து பகல் 12.41 வரை



இராமச்சந்திர குருக்கள்
பாபு சர்மா



**வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி புதுக்கணக்கு ஆரம்பித்தல்**

சித்திரை 28 ஆம் திகதி (11-05-2022) புதன்கிழமை காலை 6.10 முதல் 7.20 வரையிலான நேரம். அல்லது சித்திரை 30 ஆம் திகதி (13-05-2022) வெள்ளிக்கிழமை காலை 6.03 முதல் காலை 8.03 வரையிலான நேரம்.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புதுக்கணக்கு ஆரம்பித்தல்**

சித்திரை 08 ஆம் திகதி (21-04-2022) வியாழக்கிழமை பகல் 10.00 முதல் 11.35 வரையிலான நேரம். அல்லது சித்திரை 21 ஆம் திகதி (04-05-2022) புதன்கிழமை காலை 7.35 முதல் காலை 8.30 வரையிலான நேரம். அல்லது சித்திரை 30 ஆம் திகதி 13-05-2022 வெள்ளிக்கிழமை காலை 8.16 முதல் காலை 10.04 வரையிலான இடைப்பட்ட நேரம்.

## சுபகிருது வருட புத்தாண்டின் இராசிகளுக்கான வரவு மற்றும் செலவு

| இராசி | ஆதாயம் | விரயம் | பலன் |
|---|---|---|---|
| மேஷம் | 14 | 14 | சமசுகம் |
| ரிஷபம் | 08 | 08 | சமசுகம் |
| மிதுனம் | 11 | 05 | இலாபம் |
| கடகம் | 11 | 11 | சமசுகம் |
| சிம்மம் | 08 | 14 | நஷ்டம் |
| கன்னி | 11 | 05 | இலாபம் |
| துலாம் | 08 | 08 | சமசுகம் |
| விருச்சிகம் | 14 | 14 | சமசுகம் |
| தனுசு | 02 | 08 | நஷ்டம் |
| மகரம் | 05 | 02 | இலாபம் |
| கும்பம் | 05 | 02 | இலாபம் |
| மீனம் | 02 | 08 | நஷ்டம் |

**சுபகிருது வருட பலன்**

சுபகிருது தன்னிலே சோழதே சம்பாழ்
அபமாம் விலைகுறையு மானசாம் - சுபமாகு
நாடெங்கு மாரிமிகு நல்வினை வுண்டாகுங்
கேடெங்கு மில்லையிதிற் கேள்

இந்த சுபகிருது எனும் வருடத்தில் பூமியானது பல்வேறு விதமான விழாக்களால் பிரகாசிக்கும் அரசர்களும் கள்வர்களிடமிருந்து (மக்களுக்கு) அபயமளிப் பவர்களாகவும் சண்டையில் உற்சாகமுடையவர்களாகவும் இருப்பார்கள்.



# இந்திய செய்திகள்

## நடிகர் விஜய்யின் 'பீஸ்ட்' திரைப்படத்துக்கு கட்டாரிலும் தடை



நடிகர் விஜய்யின் பீஸ்ட் திரைப்படம் குவைத்தைத் தொடர்ந்து கட்டாரிலும் வெளியிட தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இப்படத்தின் முன்னோட்டம் அண்மையில் வெளியான நிலையில், அதில் இஸ்லாமியர்களை பயங்கரவாதிகள்போல் சித்திரித்திருப்பதாகக் கூறி, குவைத்தில் தடைசெய்யப்பட்டது.

தற்போது இதே காரணத்துக்காக மற்றொரு அரபு நாடான கட்டாரிலும் பீஸ்ட் படம் வெளியாகாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு, நடிகர் துல்கர் சல்மான் நடித்த குரூப், நடிகர் விஷ்ணு விஷால் நடித்த எவ்.ஐ.ஆர். படங்களும் இதே காரணத்திற்காக தடை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## இந்திய கடல் எல்லையில் நுழைந்த ஈரானிய சிறிய ரக கப்பல் சிறைப்பிடிப்பு



இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த ஈரானைச் சேர்ந்த சிறிய ரக கப்பலை, இந்திய கடலோரக் காவல் படையினர் பிடித்துள்ளனர். அத்தோடு கப்பலிலிருந்த 11 பேரை சென்னை துறைமுகத்துக்கு அழைத்துவந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்திய கடல் எல்லைப் பகுதியில் அந்தமானை ஒட்டியுள்ள இந்திரா பொயின்ட் என்ற கடல் பகுதியில் வெளிநாட்டுக் கப்பலொன்று அத்துமீறி நுழைந்திருப்பதை இந்திய கடலோரக் காவல் படையினர் கண்டுபிடித்தனர். உடனே, அந்த சிறிய ரக கப்பலை சுற்றிவளைத்துப் பிடித்தனர். இக்கப்பல் ஈரானைச் சேர்ந்ததெனத் தெரிந்தது. இதையடுத்து அங்கிருந்தவர்களிடம் இந்திய கடலோர பாதுகாப்புப் படையினர் விசாரணை நடத்தினர். மொத்தம் கப்பலுக்குள் 11 பேர் இருந்தனர். அவர்கள் சரியான பதிலைக் கூறவில்லை. உடனே அவர்களை கப்பலுடன் சேர்த்து சென்னை துறைமுகத்துக்கு பலத்த பாதுகாப்புடன் அழைத்துவந்தனர்.

இதையொட்டி துறைமுகத்துக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மாநில உளவுத்துறை, மத்திய உளவுத்துறை அதிகாரிகளும் துறைமுகத்துக்கு நேரில்வந்து 11 ஈரானியர்களிடமும் விசாரணை நடத்தினர். அவர்கள் வந்த கப்பலையும் தீவிரமாக சோதனை செய்தனர். போதைப்பொருள் கடத்தலுக்காக வந்தார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் மத்திய போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளும் விசாரணை நடத்தினர்.

இவர்கள் மீனவர்களா, தீவிரவாதிகளா, போதைப்பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்களா என பல்வேறு கோணங்களில் விசாரணை நடந்துவருகிறது.



## உலகிலேயே உயரமான ஆஞ்சநேயர் சிலை கர்நாடகாவில் திறப்பு

கர்நாடகத்தின் தும்கூர் மாவட்டத்தில் 161 அடி உயரமுள்ள பஞ்சமுக ஆஞ்சநேயர் சிலையை முதலமைச்சர் பசவராஜ் பொம்மை திறந்துவைத்துள்ளார்.

தும்கூர் மாவட்டம் பினதக்கரையிலுள்ள பசவேசுவரர் மடத்தில் 161 அடி உயரமுள்ள மிகப்பெரிய ஆஞ்சநேயர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இது உலகிலேயே மிகவும் உயரமான ஆஞ்சநேயர் சிலை எனக் கருதப்படுகிறது.

# மலையகத்தில் வலுக்கும் அரசுக்கு எதிரான எதிர்ப்பு; பல இடங்களின் தேவாலயங்களிலும் போராட்டம்







(பதுளை, ஹட்டன், மாத்தளை, கண்டி நிருபர்கள்)

'கோ ஹோம் கோட்டா' என்ற கோஷத்துடன் நாட்டில் பல பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்நிலையில், மலையகப் பகுதிகளிலும் நாளுக்குநாள் போராட்டங்கள் உக்கிரமடைந்து வருகின்றன.

அந்தவகையில், மாத்தளை, பசறை, கண்டி, ஹட்டன் உள்ளிட்ட பல பகுதிகளிலும் அரசுக்கெதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும், ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதலின் சூஸ்திரதாரி யார் என்பதை உடனே வெளிப்படுத்து, ஈஸ்டர் தாக்குதலில் உயிர் நீத்த அப்பாவி மக்களின் சாபம் இப்போ இந்நாட்டில் இறங்கிக்கொண்டிருக்கிறது, இனவாதத்தின்மூலம் ஆட்சிப்பீடம் ஏறிய கோட்டாபய ராஜபக்ஷ, அப்பாவி மக்களின் சாபக்கேடு ராஜபக்ஷவின் குடும்பத்தை துரத்திக்கொண்டு வருகின்றன என கத்தோலிக்க தேவாலயங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

விலைவாசி ஏற்றம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு உட்பட நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்து பொதுமக்கள் போராட்டத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்து கண்டி, ஹட்டன், மாத்தளை மற்றும் பசறை ஆகிய பகுதிகளில் அமைதி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது




# மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

## நாடு அராஜகத்தை நோக்கிச்செல்ல அனுமதிக்கவே முடியாது

### கெட்டம்பே சிறிவிமலாபிதான தேரர்



(கண்டி நிருபர்)

நாடு அராஜகத்தை சோக்கிச்செல்ல அனுமதிக்க முடியாது என பேராதனை கெட்டம்பே ராஜோபவனாராமாதிபதி வண. கெப்பெட்டியகொட சிறிவிமலாபிதான தேரர் தெரிவித்தார்.

மேற்படி தேரரின் 91ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே வாழ்த்துத் தெரிவித்து நல்லாசி பெறச் சென்றசமயம் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாடு செல்லும் நிலையை ஜனநாயத்தை நேசிப்பவர்கள் என்ற அடிப்படையில் எம்மால் அனுமதிக்க முடியாது. அராஜகம் தலைதூக்கினால் நாம் கடந்த காலங்களில் அனுபவித்த அனைத்து சுதந்திரமும் பறிபோகும் நில ஏற்படலாம். யாரும் நினைத்தவாறு சட்டத்தை கையில் எடுக்க அனுமதிக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



நாட்டில் நேற்று (10) பெய்த கனமழையால் நுவரெலியா டெல்மோர் தோட்ட மேற்பிரிவில் கோயிலின் கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் இடம்பெற்ற மண்சரிவில் இரண்டு வீடுகள் சேதத்திற்குள்ளாகின.

(படங்கள் : மஸ்கெலியா நிருபர்)

## பலாங்கொடை பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் பரவல் தீவிரம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை நகரம், பலாங்கொடை பிரதேச சபை, இம்புல்பே பிரதேச சபை ஆகிய பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்து வருவதாக பிரதேச சுகாதார வைத்திய காரியாலய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன், இந்நோய் பரவும் ஆபத்துகள் குறித்து துண்டுப் பிரசுரங்கள் மற்றும் தகவல் குறிப்புகள் மூலமும் சுகாதார தரப்பு காரியாலயங்கள் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றன

வயல்வெளிகள், தோட்டங்கள் இரத்தினக்கல் அகழ்வு கூலித் தொழிலாளிகள், சுத்திகரிப்பு ஊழியர்கள், கழிவறை தொழிலாளிகள் ஆகியோருக்கு எலிக்காய்ச்சல் துரிதமாக பரவி வருவதால் இத்துறைகளில் ஈடுபட்டுள்ளோர் சுகாதார தரப்புகளின் அறிவுரைகளை பின்பற்றுமாறு சுகாதார வைத்திய காரியாலய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதனால், இத்துறைகளில் பணிபுரிபவர்கள் பிரதேச அரச வைத்தியசாலைகள், பொது சுகாதார காரியாலயங்கள், வைத்திய அதிகாரிகள் காரியாலயங்கள், குடும்ப சுகாதார உத்தியோகத்தர் காரியாலயங்கள் ஆ கியவற்றில் எலிக்காய்ச்சலுக்கான மருந்துகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும இதுதவிர தனியார் மருந்தகங்களில் மிகக் குறைந்த விலையில் எலிக்காய்ச்சல் பரவாமல் இருப்பதற்கான மருந்துகளை பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவுரை வழங்கியுள்ளனர்.

## தனிமையில் இருந்த மூதாட்டி கழுத்து நெரித்துக் கொலை

### காதணிகளும் திருட்டு



(தலவாக்கலை நிருபர்)

வீட்டில் தனிமையிலிருந்த 85 வயதுடைய மூதாட்டி ஒருவரை கழுத்தில் துணியால் சுற்றிக் கொன்றுவிட்டு அவர் அணிந்திருந்த இரண்டு காதணிகளையும் களவாடிச் சென்றுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் தலவாக்கலை வடக்கு மடக்கும்புர என்சி தோட்டத்தைச் சேர்ந்த கருப்பன் மூக்காய் (வயது 85) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (08) மாலை இடம்பெற்றுள்ளது.

வயதான மூதாட்டி தனது மகன் மற்றும் மருமகளுடன் வசித்து வந்ததாகவும் மகனும் மருமகளும் தினமும் காலையில் வேலைக்குச் சென்று மாலையில் வீடு திரும்புவதால் பகலில் குறித்த வீட்டில் தனியாகவே இருப்பார்.

இந்நிலையில், வழக்கம்போல் வேலைக்குச் சென்றுவிட்டு சம்பவ தினத்தில் மாலை வீடு திரும்பியபோது வீட்டில் அம்மாவை கூச்சலிட்டு தேடியபோது அவர் எங்கும் இருக்கவில்லையெனவும் பின்னர் படுக்கையறையில் தனது தாய் வாயில் துணியால் அடைக்கப்பட்டு கழுத்தில் துணியொன்றினால் கழுத்து நெறிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்து கட்டிலில் கிடந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் மகன் தெரிவித்துள்ளார்.

கள்வர்கள் தனது தாய் அணிந்திருந்த இரண்டு காதணிகளை மட்டுமே களவாடிச் சென்றதாகவும் வேறு எதனையும் வீட்டுக்குள் இருந்து களவாடிச் செல்லவில்லையெனவும் வீட்டில் வசிப்பவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் இடம்பெற்ற மரண விசாரணையின் பின்னர் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது. குற்றவாளிகளை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை தலவாக்கலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உலக செய்திகள்

### பாக். நாடாளுமன்றத்தில் நள்ளிரவில் வாக்கெடுப்பு

# கவிழ்ந்தது இம்ரான் கான் அரசு: புதிய பிரதமர் தெரிவு இன்று

## மீண்டும் ஆட்சிப் பீடமேறும் ஷெரீப் குடும்பம்





பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நள்ளிரவில் நடைபெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இம்ரான் கான் தலைமையிலான அரசு கவிழ்ந்துள்ளது. இந்த வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இம்ரான் கான் கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்தனர்.

இந்நிலையில், பாகிஸ்தானின் புதிய பிரதமரைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு இன்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. முஸ்லிம் லீக் நவாஸ் கட்சித் தலைவரான ஷெபாஸ் ஷெரீப் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்ரான் கானுக்கு எதிராக பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்ததால், வாக்கெடுப்பு நடைபெறுவதை தடுக்கும் வகையில் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தார். இந்த நடவடிக்கை செல்லாது என்றும், தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் எனவும் அந்நாட்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பகலில் நடைபெறுவதாக இருந்த பாகிஸ்தான் நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு நள்ளிரவில் நடைபெற்றது. அவைக்கு இம்ரான் கான் வந்ததும், சபாநாயகரும், துணை சபாநாயகரும் பதவி விலகுவதாக அறிவித்தனர். பின்னர் ஆளும் கட்சி எம்.பிக்கள் அனைவரும் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினர்.

இடைக்கால சபாநாயகர் தலைமையில் வாக்கெடுப்பு நடைபெற்றது. 342 பேர் கொண்ட அவையில் 174 பேர் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது.

இதன்பின்னர் பேசிய நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் ஷபாஜ் ஷெரீப், தமது கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றபின் யார்மீதும் பழிவாங்கும் நடவடிக்கையோ, கைது நடவடிக்கையோ எடுக்கப்பட மாட்டாது - என்றார்.

இதனிடையே அந்நாட்டு அதிகாரிகள் யாரும் வெளிநாடு செல்லக்கூடாது என்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு விமான நிலையங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமாபாத் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

**இன்று புதிய பிரதமர் தெரிவு**

புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க நாடாளுமன்றத்தில் திங்களன்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சியின் தலைவருமான ஷெபாஸ் ஷெரீப் பிரதமர் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் தம்பியாவார்.

பாகிஸ்தான் நாடாளுமன்ற வரலாற்றிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஆட்சியை இழந்த முதல் பிரதமர் இம்ரான் கான் என்பது குறிப்பிடத்தக்கது.

**சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகும் நிலை சபாநாயகர்**

மேலும் இம்ரான் கான் மீதுள்ள பற்றுதலால் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைப் பின்பற்ற மறுத்த முன்னாள் சபாநாயகர் ஆசாத் கெய்சர், நீதிமன்ற அவதிப்புத் தண்டனைக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த உத்தரவை நிறைவேற்ற மறுத்த ஆசாத் கெய்சர் சபாநாயகர் பதவியிலிருந்து விலகியதுடன் அவையை விட்டு வெளியேறினார்.

சபாநாயகர் கட்சி சார்பற்றுச் செயற்பட வேண்டும் என்கிற நிலையில், இம்ரான் கானுடன் 30 ஆண்டுகளாக கெய்சர் கொண்டிருந்த நட்பால் அவருக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்த மறுத்துவிட்டுப் பதவி விலகினார்.

இந்த விசுவாசம் உச்ச நீதிமன்ற உத்தரவை அவமதித்ததற்கான சட்ட நடவடிக்கைக்கும், தண்டனைக்கும் அவரை உள்ளாக்கும் எனக் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியேறினார் இம்ரான் கான்**

இந்நிலையில், நாடாளுமன்றத்தில் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்வதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் தனது அதிகாரப்பூர்வ இல்லத்தை விட்டுவிட்டு இம்ரான் கான் வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**யார் இந்த ஷெபாஸ் ஷெரீப்?**

பாகிஸ்தானின் புகழ்மிக்க அரசியல் மற்றும் செல்வ செழிப்புமிக்க வம்சம் என்றால் அது ஷெரீப் வம்சமே. காஷ்மீரி பூர்வீகத்துடன் லாகூரில் ஸ்ரீல் பிசினெஸ் மூலம் முன்னேறிய இந்த வம்சத்தின் முதல் தலைமுறை அரசியல் வாரிசு பாகிஸ்தானை மூன்று முறை ஆட்சி செய்த முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப். ஆம், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் இளைய சகோதரர்தான் இந்த ஷெபாஸ் ஷெரீப்.

ஷெபாஸ், ஆரம்பத்தில் தந்தையை பின்பற்றி ஸ்ரீல் பிசினெஸில் கோலோச்ச நினைத்தார். பாகிஸ்தானி ஸ்ரீல் என்ற நிறுவனத்தை தொடங்கி அதை வெற்றிகரமாக நடத்தினார். 1980களில் ஷெரீப் குடும்பம் அரசியலில் மிகப்பெரிய வளர்ச்சி கண்டுவந்தது. நவாஸ் ஷெரீப், 1983இல் பஞ்சாப் மாகாண அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தார்.

தனது சகோதரர் நவாஸை பின்பற்றி அரசியல் உலகுக்குள் காலடி எடுத்துவைத்தார் ஷெபாஸ் ஷெரீப். லாகூரை அடக்கியுள்ள பஞ்சாப் மாகாணத்தின் உறுப்பினராக 1988ஆம் ஆண்டு தேர்தலில் முதன்முறையாக வெற்றிபெற்ற ஷெபாஸ், சில ஆண்டுகள் பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

1997 பஞ்சாப் மாகாண தேர்தல்தான் இவருக்கு திருப்புமுனையாக அமைந்தது. இந்தத் தேர்தல் வெற்றியால், பஞ்சாப் மாகாணத்தின் 13ஆவது முதலமைச்சராக பதவியேற்றார் ஷெபாஸ். முதலமைச்சர் பதவி, ஷெபாஸின் இன்னொரு முகத்தை மக்களுக்கு வெளிப்படுத்தியது. அதுதான் நல்ல நிர்வாகம். பாகிஸ்தானின் அதிக மக்கள்தொகை கொண்ட மாகாணமான பஞ்சாப் உட்கட்டமைப்பில் பல மெகா திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்தினார். பாகிஸ்தானின் முதல் நவீன வெகுஜன போக்குவரத்து அமைப்பை தனது சொந்த ஊரான லாகூரில் ஏற்படுத்திய ஷெபாஸ், சுகாதாரம், கல்வி, விவசாயம் மற்றும் தொழில்துறை துறைகளில் அதிக கவனம் செலுத்தி வெகுவிரைவாக மக்கள் மத்தியில் தலைவராக உயர்ந்தார்.

ஆனால், அனைத்தும் தவிடுபொடியாகின. 1999இல் பாகிஸ்தானின் தேசிய அரசியலில் ஸ்திரத்தன்மை இல்லாமல்போக, இராணுவப் புரட்சி ஏற்பட்ட இராணுவ ஆட்சி அமுலானது. இதில் ஷெபாஸின் முதலமைச்சுப் பதவியும் பறிபோனதுடன் சிறையிலும் அடைப்பட்டார். அடுத்த ஆண்டே சவூதிக்கு நாடுகடத்தப்பட்ட அவர், பல ஆண்டுகள் பாகிஸ்தான் எல்லைக்குள் நுழையவில்லை. இறுதியாக, 2007இல் மீண்டும் நாடு திரும்பியதும், தனது அரசியல் வாழ்க்கையை மீண்டும் பஞ்சாப் மாகாணத்திலிருந்தே தொடங்கினார்.

இதன்பின் 2008 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் மீண்டும் பஞ்சாப் மாகாண முதலமைச்சரானவர், தேசிய அரசியலில் நுழைந்தது 2017ஆம் ஆண்டு தான். அப்போது பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப், பனாமா பேப்பர்ஸ் ஊழல் வழக்கில் சிக்கி பிரதமர் பதவியை இழந்ததுடன், பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் பதவியையும் இழந்தார். இதனால், பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராக தேசிய அரசியலில் காலடி எடுத்துவைத்த ஷெபாஸ் ஷெரீப் மீதும் பல்வேறு ஊழல் வழக்குகள் உள்ளன. எந்த வழக்கிலும் குற்றவாளியாக என நிரூபிக்கப்படவில்லை.

2018இல் ஆட்சிக்கு வந்தபிறகு ஷெபாஸ் ஷெரீப்பை குறிவைத்து சில நடவடிக்கைகளை எடுத்தார் இம்ரான் கான். 2019இல் ஷெபாஸ் மற்றும் அவரது மகன் ஹம்சா ஆகியோருக்குச் சொந்தமான 23 சொத்துகளை பணமோசடி குற்றச்சாட்டில் முடக்கினார். இதே வழக்கில் அடுத்த ஆண்டே அவரை கைதுசெய்தும் அதிரடி காட்டினார் இம்ரான். அன்று தொடங்கியது இம்ரான் - ஷெபாஸ் மோதல். பல மாத சிறைவாசத்துக்கு பின் 2021இல் வெளியே வந்த ஷெபாஸ், அதிலிருந்து எதிர்க்கட்சிகளுடன் இணைந்து இம்ரான் கானின் பழிவாங்கும் அரசியலை முடிவுக்குக் கொண்டுவர பல முயற்சிகளை மேற்கொண்டுவந்தார்.

இதற்காக தீவிரமாக பணியாற்றி வந்தவர், வெளிநாட்டு சதி குற்றச்சாட்டை முன்வைத்து இம்ரான் கான் தலைமையிலான பிடிஐ அரசை கவிழ்க்க எதிர்க்கட்சிகளின் முயற்சிகளை முன்னின்று நடத்தி இப்போது அதில் வெற்றியும் பெற்றுள்ளார். இம்ரான் கானுக்கு எதிரான போராட்டத்தின்போதே எதிர்க்கட்சிகள் ஒன்றாக ஷெபாஸைதான் அடுத்த பிரதமராக அறிவித்தனர். பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) தலைவர் பிலாவல் பூட்டோ இதை உறுதிப்படுத்தவும் செய்துள்ளார்.

பாகிஸ்தானின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளைக் கட்டுப்படுத்துவது அந்நாட்டு இராணுவமே. முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் பாகிஸ்தான் இராணுவத்துடன் இணக்கமான உறவைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், ஷெபாஸ் இராணுவ ஜெனரல்களுடன் மிக நெருக்கமான உறவை கொண்டுள்ளார். அதேபோல், அமெரிக்காவுக்கு எதிரான மனநிலையும், சீனாவுக்கு ஆதரவான மனநிலையும் கொண்டவர் என்றும் அவரை சுட்டிக்காட்டுகின்றனர். இம்ரான் கான் விவகாரத்தில் கடந்த வாரம் பேசிய ஷெபாஸ், “அமெரிக்காவுடனான நல்லுறவு பாகிஸ்தானுக்கு நல்லது அல்லது கெட்டது” என்று வெளிப்படையாகவே தெரிவித்து இதை உறுதிப்படுத்தவும் செய்தார்.

எது எப்படியோ, பாகிஸ்தானின் 23ஆவது பிரதமராக ஷெபாஸ் வரும் பட்சத்தில் அவர் முன் சவால்களே அதிகம் உள்ளன. பாகிஸ்தானின் பொருளாதாரம், அதிக பணவீக்கம், வீழ்ச்சியடைந்துவரும் அந்நாட்டு நாணயத்தின் மதிப்பு மற்றும் வேகமாக சரிந்துவரும் அந்நிய செலாவணி என அவர் முன் சவால்கள் அணிவகுத்து நிற்கின்றன. இப்படியான பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் அரசியல் ஸ்திரமின்மைக்கு மத்தியில் ஷெரீப் குடும்பம் பாகிஸ்தானில் மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமரவுள்ளது. பஞ்சாப் மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தபோது தனது திறமையான நிர்வாகத்தால் கவனம் ஈர்த்தவர் பாகிஸ்தானின் (ஷெரீப் குடும்பத்தின்) புதிய பிரதமராக நாட்டை மீட்டெடுப்பாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள 10 இலட்சம் யாத்திரிகர்களுக்கு அனுமதி



புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள வெளிநாட்டவர்கள் உட்பட 10 இலட்சம் யாத்திரிகர்களை அனுமதிக்க சவூதி அரேபிய அரசு முடிவுசெய்துள்ளது.

யாத்திரிகர்கள் 65 வயதுக்கு கீழ் உள்ளவர்களாகவும், கொரோனாவுக்கு 2 டோஸ் தடுப்பூசியையும் செலுத்திக்கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும் எனவும் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிநாட்டவர்கள் அண்மையில் எடுக்கப்பட்ட ஆர்டிபிசிஆர் நெகட்டிவ் சான்றிதழையும் காண்பிக்க வேண்டும் எனவும், உடல் ஆரோக்கியத்திற்கு அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேட்டோ அமைப்பில் இணையும் மேலும் இரு ஐரோப்பிய நாடுகள்



உக்ரைன் மீது ரஷ்யா போர் நடத்திவரும் நிலையில், நேட்டோ கூட்டமைப்பில் பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் விரைவில் இணையவுள்ளதாக நேட்டோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேட்டோ நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டதாக அமெரிக்காவின் மூத்த அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நேட்டோ அமைப்பை வலுவடையச் செய்யக்கூடாது என்ற நோக்கத்தில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உக்ரைன் மீது எடுத்த இராணுவ நடவடிக்கையின் காரணமாக அவர் நினைத்ததற்கு மாறாக நேட்டோ அமைப்பு வலுவடைந்துள்ளதாக நேட்டோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே 30 நாடுகளைக்கொண்ட நேட்டோ அமைப்பில் தற்போது பின்லாந்து மற்றும் சுவீடன் சேர்வதன் மூலம், உறுப்புநாடுகளின் எண்ணிக்கை 32ஆக அதிகரிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, உக்ரைன் மீது ரஷ்யா எடுத்துள்ள இராணுவ நடவடிக்கையின் விளைவாகவே நேட்டோ அமைப்பில் சேர்வது குறித்து பரிசீலனை செய்யும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக பின்லாந்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

## டுனிசியாவில் படகு விபத்து; அகதிகள் 13 பேர் பலி

டுனிசியாவில் அகதிகளை ஏற்றிச்சென்ற படகுகள் விபத்துக்குள்ளாகி நீரில் மூழ்கியதில் குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

வாழ்வாதாரம் தேடி ஐரோப்பிய நாடுகளை நோக்கி 50இற்கும் மேற்பட்ட அகதிகளை ஏற்றிச்சென்ற இரு படகுகள் விபத்துக்குள்ளாகிய நிலையில் நீரில் மூழ்கியன.

நீரில் தத்தளித்தவர்களை அருகிலுள்ள கிராமவாசிகள் மீட்டுள்ளனர். 13 பேரின் உடல் கண்டெடுக்கப்பட்ட நிலையில் 37 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். காணாமல்போனவர்களை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. காணாமல்போன பெற்றோரை குழந்தைகள் தேடி அலையும் காட்சி காண்போரை கணக்கச் செய்துள்ளது.


# உக்ரைனின் மைரோரோட் விமானத்தளத்தில் வெடிமருந்து கிடங்கை தாக்கி அழித்தது ரஷ்யா

உக்ரைனிலுள்ள மைரோரோட் விமானத் தளத்திலிருக்கும் வெடிமருந்து கிடங்கை ரஷ்யப் படைகள் தாக்கி அழித்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யப் படைகளின் தாக்குதல் கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி தொடங்கிய நிலையில், இன்று 47ஆவது நாளாகவும் தாக்குதல் தொடர்கிறது.

இந்நிலையில், போல்டாவா பிராந்தியத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் உக்ரைன் விமானப்படையின் MiG-29 ரக போர் விமானமும், Mi-8 ரக ஹெலிகொப்டரும் தாக்கி அழிக்கப்பட்டதாக ரஷ்ய அமைச்சின் செய்தித் தொடர்பாளர் இகோர் கொனாஷென்கோவ் தெரிவித்துள்ளார்.

மேலும், திநிப்ரோ பிராந்தியத்தில் ஒரு பெரிய வெடிமருந்து கிடங்கும் தாக்கி அழிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.



**ஸெலென்ஸ்கி - பொரிஸ் சந்திப்பு**

உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியும், பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் கீவ் நகரின் மையப்பகுதியில் மக்களை சந்தித்து உரையாடியுள்ளனர்.

உக்ரைன் பாதுகாப்புத்துறை அமைச்சின் ட்விட்டர் பக்கத்தில், ‘‘ஜனநாயகம் என்றால் இப்படித்தான் இருக்கும்! தைரியம் என்றால் இப்படித்தான் இருக்கும்! மக்களுக்கும், நாடுகளுக்கும் இடையிலான உண்மையான நட்புறவு என்றால் இப்படித்தான் இருக்கும்!’’ என உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியும், பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் கீவ் நகரின் மையப்பகுதியில் மக்களை சந்தித்து உரையாடியுள்ள வீடியோ வெளியிட மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



**அதிகரிக்கும் செர்னோபில் கதிரியக்கத்தின் அளவு**

செர்னோபில் அணுமின் நிலையத்தில் ரஷ்ய இராணுவ வீரர்கள் வசித்த இடத்தில் கதிரியக்கத்தின் அளவு வழக்கத்தை விட அதிகரித்திருப்பதால் அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அறையில் கதிரியக்கத்தை வெளிப்படுத்தும் பொருட்கள் இருந்ததற்கான அடையாளம் எதுவும் இல்லை என்றபோதும், கட்டடத்திற்குள் ரஷ்ய வீரர்களால் அவர்களது காலணி மூலம் கொண்டுவரப்பட்ட சிறியளவிலான துகள்கள், தூசிகளிலிருந்து கதிரியக்கம் கசிவதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இயற்கையாக நிகழும் கதிர்வீச்சு என உலக அணுசக்தி சங்கம் விவரிக்கும் அளவை விட, ரஷ்ய வீரர்கள் பயன்படுத்திய அறையின் உள்ளே இருக்கும் அளவுகள் சற்று அதிகமாக இருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.





ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் Ursula von der Leyen உக்ரைனின் புச்சா (Bucha) நகருக்குச் சென்று அங்கு போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டபோது....

# கிண்ணியா ஆலங்கேணியில் வீடொன்று தீக்கிரை




பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்கள் நாசம்




(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா, ஆலங்கேணியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு (08) ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாக வீடு தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இச்சம்பவம் நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா, ஆலங்கேணி, வள்ளுவர் வீதியில் அமைந்துள்ள வீடே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

திருமணம் முடிந்து நான்கு நாட்களான புதுமணத் தம்பதியினர் தமது (ஆலங்கேணி) வீட்டை விட்டு, மாமியார் வீடான மட்டக்களப்புக்குச் சென்றிருந்தனர். இதன்போது மணமகன் வீட்டில் யாரும் இருக்கவில்லை. அச்சமயம் குறித்த வீடு தீக்கிரையாகியுள்ளது.

பக்கத்து வீட்டுக்காரர்கள் அனைவரும் இணைந்தே தண்ணீர் ஊற்றி அணைத்துள்ளார்கள். திருமணத்துக்கு வாடகைக்கு எடுத்த தளபாடங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், மின்சார உபகரணங்கள், முதலான பொருட்கள் எல்லாம் அவ்வீட்டினுள்ளே வைக்கப்பட்டிருந்தன.

அன்றைய தினம் மின் ஒழுக்கு ஏற்பட்டு வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக வும் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்துள்ளதாகவும் தெரியவருகிறது. மின்சார ஒழுக்கு ஏற்பட்டு வீடு எரிந்த வேளையில் இலங்கை மின்சார சபை கிண்ணியா அலுவலகத்துக்கும், கிண்ணியா பொலிஸாருக்கும் அறிவித்துள்ளனர்.

இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். பெறுமதிமிக்க பொருட்கள் அழிந்துவிட்டன. அரசாங்கம் நஷ்டஈடு வழங்கவேண்டும் என வீட்டு உரிமையாளர்கள் உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

## இரண்டு கிலோ கேரள கஞ்சாவுடன் பெரியநீலாவணையில் இருவர் கைது



(பாறுக் ஷிஹான்)

மோட்டார்சைக்கிளில் 2 கிலோ கேரள கஞ்சாவினை கடத்திய குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்களை பெரியநீலாவணை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் (09) மாலை காத்தான்குடி பகுதிக்கு 2 கிலோ கேரள கஞ்சா கடத்தப்படவுள்ளதாக களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படைக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே இரண்டு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேகநபர்கள் பயணம்செய்த மோட்டார்சைக்கிள் உட்பட 13,500 பணமும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் சம்மாந்துறை இஸ்மாயில்புரம் வளாத்தப்பிட்டி எனும் முகவரியைச் சேர்ந்த 40 வயதுடையவரும் பீச் றோட் பெரியநீலாவணை மருதமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய நபருமாவர்.

மேலும் சான்றுப்பொருளுடன் பெரியநீலாவணை பொலிஸார் சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏறாவூர் நகரசபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் வெற்றிடத்திற்கு இருவர் நியமனம்



(நிந்தவூர் நிருபர்)

ஏறாவூர் நகரசபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் வெற்றிடத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மீராசாகிப் அப்துல் கபூர், அப்துல் மஜீட் சப்றா ஆகியோர் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சரும், ஏறாவூர் நகரசபையின் உறுப்பினருமான எம்.எஸ்.சுபைர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ்.நழீம், ஏறாவூர் நகர சபையின் செயலாளர் எம்.எச்.எம்.ஹமீம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் உறுப்பினருமாகிய ஏ.எம்.மாஹிர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எஸ்.எம்.எம்.அருஸ் உட்பட கட்சியின் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இச்சத்தியப்பிரமாண நிகழ்வில் மட்டக்களப்பு மாநாகர சபை உறுப்பினராக அப்துல் லத்தீப், ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை உறுப்பினராக ஏ.றகுமா பீவி ஆகியோரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் எம்.எஸ்.சுபைர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## திருமலை – மட்டக்களப்பு பிரதான வீதியில் வேனொன்று விபத்து; பெண்ணொருவர் பலி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி கிளபென்பேக் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தாயொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (09) பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து கிண்ணியா நோக்கி பயணித்த ரிப்பர் வாகனமும் கிண்ணியா பிரதேசத்திலிருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த வேன் ஒன்றும் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ரத்னகலாவதி (72 வயது) எனவும் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு சுற்றுலா வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேரில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த வயோதிபரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துடன் தொடர்புடைய ரிப்பர் வாகனத்தின் சாரதியை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தங்கப் பதக்கங்களை வென்ற மொஹமட் சபான்



தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் 100ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மொஹமட் சபான் தங்கப் பதக்கம் வென்று அசத்தினார்.

போட்டித் தொடரின் இரண்டாவது நாளான நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட மொஹமட் சபான் தங்கப் பதக்கம் வென்றார். போட்டியை அவர் 21.44 செக்கன்களில் நிறைவுசெய்தார். முன்னதாக நடைபெற்ற தகுதிச்சுற்று மற்றும் அரை இறுதிப் போட்டிகளில் அவர் முதலிடங்களைப் பெற்றிருந்தார்.

அண்மைக்காலமாக தேசிய மட்டப் போட்டிகளில் பிரகாசித்து வருகின்ற மொஹமட் சபான், இறுதியாக கடந்த மாதம் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவுக்கான 2ஆவது தகுதிகாண் போட்டியிலும் கடந்த பெப்ரவரி மாதம் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவுக்கான முதலாவது தகுதிகாண் போட்டியிலும் முதலிடங்களைப் பெற்றிருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இதேவேளை, ஆண்களுக்கான 100 மீற்றர் தகுதிச் சுற்றில் பங்குகொண்ட சபான், போட்டியை 10.91 செக்கன்களில் நிறைவுசெய்து முதலிடத்தைப் பிடித்தார்.

## 9 ஆண்டுகளின் பின்னர் சி.எஸ்.கே. அணியில் அறிமுகமான இலங்கை வீரர்

நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கெதிரான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அறிமுகம் பெற்ற இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் மஹேஸ் தீக்ஷன 9 ஆண்டுகளின் பின்னர் சி.எஸ்.கே. அணியில் அறிமுகமான இலங்கை வீரரானார்.

குறித்த போட்டியில் சி.எஸ்.கே. அணியில் தென்னாபிரிக்க வீரர் டுவைன் பிரிடோரியஸுக்குப் பதிலாக இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் மஹேஸ் தீக்ஷன அறிமுகமானார். 2022 ஐ.பி.எல். மெகா ஏலத்தில் இலங்கை வீரர் தீக்ஷனவை ரூ. 70 இலட்சம் விலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தெரிவுசெய்தது.

சி.எஸ்.கே. அணியில் 2013இற்குப் பிறகு விளையாடும் இலங்கை வீரர் மஹேஸ் தீக்ஷனவாவார். 2012இல் கடைசியாக நுவான் குலசேகர விளையாடும் 11 பேரில் ஒருவராக இடம்பெற்றார். 2013ஆம் ஆண்டு குலசேகரவும் அகில தனஞ்ஜெயவும் சி.எஸ்.கே. அணியில் இடம்பெற்றாலும் விளையாட வாய்ப்பு கிடைக்கவில்லை. அதன்பிறகு இப்போதுதான் ஓர் இலங்கை வீரர் சி.எஸ்.கே. அணியில் இடம்பெற்றார். 21 வயதாகும் இளம் வீரர் மஹேஸ் தீக்ஷன, இலங்கை அணிக்காக இதுவரை 4 ஒருநாள் 15 இருபதுக்கு 20 சர்வதேச ஆட்டங்களில் விளையாடியுள்ளார்.

**சி.எஸ்.கே. அணியில் விளையாடிய இலங்கை வீரர்கள்**

சாமர கபுகெதர - (2008)
முத்தையா முரளிதரன் - (2008, 2009, 2010)
திலான் துஷார - (2009, 2010)
திஸார பெரேரா - (2010)
நுவான் குலசேகர - (2011, 2012, 2013)
சுராஜ் ரந்தீவ் - (2011,2012)
அகில தனஞ்ஜெய - (2013)
மஹேஸ் தீக்ஷன - (2022)



## இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளர்



இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளரும் முன்னாள் வீரருமான கிறிஸ் சில்வர்வூட் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் தலைமைப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட மிக்கி ஆர்த்தரின் வெற்றிடத்துக்கே கிறிஸ் சில்வர்வூட் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிறிஸ் சில்வர்வூட் தலைமைப் பயிற்றுவிப்பாளராக வந்ததன் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணி, முதலாவதாக விளையாடவுள்ள தொடராக பங்களாதேஷ் அணியுடனான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அமைகின்றது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com




## ஓட்டமாவடி கராத்தே சம்மேளனத்திற்கு 14 பதக்கங்கள்



(மீராவோடை நிருபர்)

வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களுக்கு ஸ்ரீ லங்கா கராத்தே தோ சம்மேளனம் நடத்திய கராத்தே போட்டியில் கல்குடா - ஓட்டமாவடி சம்மேளன வீரர்கள் 14 பேருக்கு பதக்கங்கள் கிடைத்துள்ளதாக சம்மேளனத்தின் பிரதான பயிற்றுவிப்பாளர் ஏ.ஆர். நவாஸ் தெரிவித்தார்.

திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை சிறந்த முறையில் வெளிப்டுத்திய வீரர்களுக்கும் வழிகாட்டிய ஜப்பான் கராத்தே தோ அமைப்பின் பிரதான பயிற்றுவிப்பாளர் எச்.எம். விஜயகுமார ஹேரதுக்கும், கல்குடா சம்மேளனத்தின் பயிற்றுவிப்பாளர் ஏ.ஆர். நவாஸ் பாராட்டுகளை தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7